ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-கஎ] பிரமாதி—வைகாசி [பரல்-உ

திருக்குறள் உவமானத்தின் அழகு

(துடிசைகிழார் அ. சிதம்பர முதலியார்)

உலகின்கண் பல புலவர்கள் சிறந்து விளங்கியுள்ளார்களேனும் திருவள்ளுவரைப்போல் உவமானங்களைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தவர் ஒருவருமிலர்.

உதாரணமாகச் சில குறள்களை எடுத்துக் கொள்ளலாம் :—

இல்லறம் 11—அதி. செய்ந்நன்றியறிதல்

I. காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

பரிமேலழகர் :—ஒருவனுக்கு இறுதி வந்த எல்லைக்கண் ஒருவன் செய்த உபகாரம் தன்னை நோக்கச் சிறிதாயிருந்ததாயினும் அக்காலத்தை நோக்க நிலவுலகத்தினும் மிகப் பெரிது.

குறிப்பு :—அக்காலம் நோக்குவது அல்லது பொருள் நோக்கலாகாது என்பதாம். காலத்தினால் என்பது வேற்றுமை மயக்கம்.

மணக்குடியார் :—உதவி வேண்டுங்காலத்தில் செய்த உதவிதான் சிறிதாயிருந்ததாயினும் உலகத்தினும் பெரிதாம்.

குறிப்பு :—காலத்தினால் என்பது வேற்றுமை மயக்கம். இஃது, உதவி வேண்டும் காலத்தில் செய்த உதவி மிகப் பெரியது என்றது.

பரிதியார் :—உதவி வேண்டுங் காலத்தில் ஒருவனுக்கு ஒருவன் செய்த உதவியால் ஏற்படும் நன்மை சிறிதாயிருந்தாலும், நிலத்தினால் ஒருவன் அடையும் நன்மையைவிடப் பன்மடங்கு பெருமை மிக்கது.

குறிப்பு :—மாண் = பெருமை, பெரிது = மிக்கது, ஞாலத்தின் = இன் உருபு ஐந்தாம் வேற்றுமை ஒப்புப்பொருள்.

ஞாலத்தின் மாணப் பெரிது என்றது பருவகாலத்தில் விதைக்கும் நல் வித்திற்கு நிலமானது நல்ல பலனைக் கொடுக்கின்றது. ஆனால் பலனைப் பெறுபவன் அந் நிலத்திற்குச் சில உபசாரங்களைச் செய்து—அதாவது, உழுது, எருவிட்டு, நீர் பாய்ச்சி, பண்படுத்தி, பயிரிட்டு, களைகட்டு, பாதுகாத்துப் பலனைப் பெறவேண்டும்.

ஆனால் பெறுபவனுடைய உழைப்போ வேறு கைம்மாறோ சிறிதும் இன்றிக் காலத்தினால் ஒருவன் ஒருவனுக்கு உதவி செய்தால், அவ்வுதவி நிலம் செய்யும் உதவியைவிடப் பன்மடங்கு பெருமை மிக்கது என்பது பெற்றாம்.

பருவத்தில் இட்ட வித்து சிறிதாயிருந்தாலும், அதன் பயன்விளைவு பெரிதாயிருப்பதுபோல, காலத்தில் செய்த உதவி சிறிதாயிருந்தாலும் பயன் விளைவு பெரிதாயிருக்கும். அவ்வுதவி கைம்மாறு கருதாத உதவியானதால் "மாணப் பெரிது" என்றார்.

கடலிற் பெரியது

II. பயன்றூக்கார் செய்த உதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

பரிமேலழகர் :—இவர்க்கு இது செய்தால் இன்னது பயக்கும் என்று ஆராய்தல் இலராய்ச் செய்த உதவியாகிய ஈரம் உடைமையை ஆராயின், அதன் நன்மை கடலினும் பெரிதாம்.

குறிப்பு :—இவை மூன்று பாட்டானும் முறையே காரணமின்றிச் செய்ததூஉம், காலத்தினாற் செய்ததூஉம், பயன் தூக்காராய்ச் செய்ததூஉம் அளவிலவாதல் கூறப்பட்டது.

மணக்குடியார் :—ஒரு பயனைக் கருதாராய்த் தமக்குச் செய்த உபகாரத்தினால் உண்டாய நன்மையை ஆராயின் அந் நன்மை கடலினும் பெரிது.

குறிப்பு :—இஃது, ஒரு பயனைக் கருதாது செய்த உதவி கடலினும் பெரிது என்றது.

பரிதியார் :—கைம்மாறு கருதாதவர் செய்த உதவியினால் உண்டாம் நன்மையை ஆராய்ந்து பார்க்கின், அந்த நன்மை கடலால் ஒருவன் அடையும் நன்மையைவிடப் பெருமை மிக்கது.

குறிப்பு :—பயன் தூக்கார் = வினையெச்சத் திரிபாய் நின்றது. Vide,

“ வினை எஞ்சு கிளவியும் வேறு பல் குறிய ”
(தொல் - எச்சம் 611)

கடல்நீர் எழிலியாக மாறி உலகத்துக்கு மழையாகப் பயன் படுகிறது. கடலானது உலகத்தாரிடம் இருந்து யாதொரு கைம்மாறையும் எதிர்பார்க்கவில்லை என்பது தெளிவு.

ஆனால், கடல் மழையை எதிர்பார்த்துள்ளது. இதனை

“ நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின் ”

என்னும் குறளால் அறியலாம்.

கடல் தனக்கு ஒரு பயனைக் கருதியே தன்னுடைய நீரை எழிலிக்குக் கொடுக்கின்றது. ஆனால், யாதொருவித கைம்மாறையும் கருதாது ஒருவன் ஒருவனுக்குச் செய்த உதவியானது கடல் உலகத்தாருக்குச் செய்யும் நன்மையைக் காட்டிலும் பெருமை மிக்கது என்பது தெளிவு.

மலையிற்பெரியது

III. நிலையிற் றிரியா(து) அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

பரிமேலழகர் :—இல்வாழ்க்கையாகிய தன் நெறியின் வேறுபடாது நின்று அடங்கினவனது உயர்ச்சி, மலையின் உயர்ச்சியினும் மிகப்பெரிது.

குறிப்பு :—திரியாதடங்குதல்—பொறிகளால் புலன்களை நுகராநின்றே அடங்குதல்.

மலை—ஆகுபெயர். உயர்ச்சியை உணர்த்திற்று.

தோற்றம்— ” ” ”

மணக்குடியார் :—தனது நிலையில் கெடாதே அடங்கினவனது உயர்ச்சி மலையினும் மிகப்பெரிது.

குறிப்பு :—நிலை=வருணாச்சிரம தருமம். இஃது அடக்கம் உயர்வை நல்கும் என்றது.

பரிதியார் :—[“பரிமேலழகர் ‘அடக்கமுடைமை’ என்னும் அதிகாரத்தை இல்லறவியலில் 13-ம் அதிகாரமாக அமைத்துள்ளார்.”

மணக்குடியாரும் பரிதியாரும் துறவற வியலில் 27-வது ஆக அமைத்துள்ளார்கள்.”]

இருமை வகை தெரிந்து ஈண்டுத் துறவற நிலையைக் கைக்கொண்ட ஒருவன் அந்நிலையினின்றும் எக்காரணத்தைக்

கொண்டும் வேறுபடாது மனம், மொழி, மெய்களில் அடங்கியவனுடைய காட்சி முதலிய தன்மைகளானவை, மலையினுடைய காட்சி முதலிய தன்மைகளைவிடப் பெரிதும் மாட்சிமையுடையவைகள் ஆகும்.

குறிப்பு :—நிலை—இல்லற துறவற நிலைகள். ஈண்டு, துறவற நிலையைக் குறித்தது.

தோற்றம்: காட்சி, பிறப்பு, மேன்மை, அசைவின்மை புகழ்ச்சி, போலிவு, மூலம் எனப் பல் பொருள்படும்.

“அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப்பெரிது” என்றதால் காட்சி முதலிய தன்மைகளிலும் துறவறத்தானுடைய நிலை மாட்சிமைப் பட்டதாக இருக்கவேண்டும். அவைகளை ஆராய்வோம்.

1. காட்சி

மலையானது தொலைவிடத்தினின்றும் நோக்க அழகாகவும், பக்கத்தினின்றும் நோக்கக் கரடு முரடு ஆகவும் காணப்படும்.

ஆனால், அடக்கமுடைய துறவியினுடைய காட்சியோ எவ்விடத்தும் ஒரு தன்மைத்து ஆதலால் மலையைக் காட்டிலும் சிறப்புடையதாம்.

2. பிறப்பு

மலை அசரப்பிறப்பு—துறவி சரப்பிறப்பு. சரம் அசரத்தை விடச் சிறந்த தென்பது சொல்லாமலே விளங்கும்.

3. மேன்மை (உயர்ச்சி)

மலையின் உயர்ச்சியானது அம்மலையுள்ள நாட்டார்க்கே விளங்குந் தன்மையுள்ளது.

ஆனால், அடக்கமுடைய உள்ளத்தால் பொய்யாதொழுகும் துறவியினுடைய உயர்ந்த தன்மையோ (புகழ்) என்றால் உலகத்தார் எல்லாராலும் வானோராலும் கொண்டாடும் பெருமை வாய்ந்தது.

4. அசைவின்மை

மலை இயற்கையிலேயே அசைவின்மையாகிய தன்மையை உடையது.

ஆனால், இயற்கையிலேயே சலிக்கும் தன்மையையுடைய மனம் மொழி மெய்களை அடக்கி ஆளும் துறவியினுடைய தன்மை மலையினும் சிறந்த தென்பது கூறாமலே அமையும்.

5. புகழ்ச்சி

மலையை உலகத்தார் புகழ்வது எதனால் என்றால்

(a) அகில், மிளகு, கோட்டம், தக்கோலம், குங்குமம் என்ற மலைபடுபொருள்களைக் கொடுக்கக் கூடியது ஆகையாலும்,

(b) மேகங்களைத் தடுத்து, மழையைப் பெய்விக்கச் செய்து ஏரி குளங்களை நிரப்பி, நாட்டு வளங்களை வளரச் செய்வதாலும் என்க.

ஆனால், துறவியின் புகழ் உலகத்தில் அதனினும் சிறந்ததாயிருப்பது எதனால் என்றால்

மலை படுபொருள்கள் ஐந்தாயிருப்ப, துறவி படுபொருள் ஆறாகிறது. (படுதல்=ஒழிதல்) அவைதான்:—காமம், குரோதம், உலோபம், மோகம், மதம்,மாச்சரியம் என்பன.

மழையை உண்டு பண்ணுவதற்குத் துறவிகளே காரணம். "மழையும் தவமிலார் இல்வழி யில்"

துறவிகள் மழைக்குக் காரணராயிருப்பதோடு, கடவுளின் அருளை உளங்கொண்டு பக்குவ ஆன்மாக்களின் உளங்களாகிய ஏரி குளங்களில் நிரப்பி, உயிர்களை வளம் படுத்துவதாலும் என்க.

6. பொலிவு

மலையின்மேலுள்ள உயர்ந்த பாகங்களில் ஏறிப் பள்ளத்தாக்குகளைப் பார்ப்போமானால் மயக்கம் உண்டாகும்.

ஆனால், ஐந்தடக்கிய துறவிகளைப் பார்த்தவுடனும் அவர்களுடன் பழகிய உடனும், ஒருவனுக்கு மயக்கம் ஒழியும்.

ஆதலின், மலையின் பொலிவைவிடத் துறவியின் பொலிவு சிறந்ததாயிற்று.

7. மூலம்

மலையானது இரத்தினக் கற்களுக்கும், பொன் முதலிய உலோகங்களுக்கும் உறைவிடமா யிருப்பதனால் சிறந்ததெனக் கருதப்படுகிறது.

ஆனால், அடக்கமுடைய துறவிகள் பொன் போன்ற மொழிகளை உபதேசம் செய்வதாலும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களைப் பயக்கும் மணி மொழிகளைக் கூறுவதாலும் மலையைவிடச் சிறந்தவர் ஆவர் என்க.

இம்மூன்று குறள் மணிகளும்தான் சேக்கிழாருக்கு அமைச்சுரிமையையும், "உத்தம சோழப் பல்லவராயன்"

என்ற பட்டத்தையும், பொற்பூவையும் பெறும்படி செய்தன. பெரிய புராணத்திற்கு ஆணி வேர்கள் என்றே கூறலாம்.

IV. **அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
வற்றன் மரம்தளிர்த் தற்று.

பரிமேலழகர்:—மனத்தின்கண் அன்பில்லாத உயிர் இல்லறத்தோடு கூடிவாழ்தல், வன்பாலின்கண் வற்றலாகிய மரம் தளிர்த்தாற்போலும்.

குறிப்பு:—கூடாதென்பதாம். வன்பால்=வன்னிலம். வற்றல் என்பது பால் விளங்கா அஃறிணைப் படர்க்கைப் பெயர்.

மணக்குடியார்:—தன்னிடத்து அன்பில்லாத உயிரினது வாழ்க்கை, வன்பாரிடத்து நடப்பட்ட உலர்ந்த மரங்கள் தளிர்த்தாற் போலும் (தளிர்த்தற்குக் காரணம் இன்மையால் தளிரா தென்றவாறு).

குறிப்பு:—இல்லாத: ஈறு கெட்டது; தளிர்த்தால்: ஈற்று ஆல் கெட்டது.

பரிதியார்

உவமானம்	**உவமேயம்**
வன்பார்	அகம்
வற்றல் மரம்	அன்பில்லா உயிர்
தளிர்த்தல்	வாழ்க்கை

ஈரமில்லாத வலிய நெஞ்சத்தினிடத்தில் அன்பில்லாது மெலிந்த உயிரினுடைய உடலோடு கூடிய வாழ்க்கை, ஈரமில்லாத வலிந்த நிலத்தில் உள்ள நீர்வற்றி மெலிந்த மரமானது தளிர்த்துத் துளிர்விட்டு வளர்வது போன்றது.

குறிப்பு:—ஈரமில்லாத வலிந்த நிலத்தின்கண் உள்ள நீர் வற்றி மெலிந்த மரமானது எப்படித் தளிர்த்துத் துளிர்விட்டு வளரமுடியாதோ, அப்படியே, ஈரமில்லாத வலிய நெஞ்சத்தில் அன்பு முகிழ்க்காமல் மெலிந்த உயிரினுடைய உடலோடுகூடிய வாழ்க்கை இன்பம் பயக்காது என்பதாம்.

அன்பில்லா—என்றதால் அன்பை ஈனும் ஆர்வமாகிய இரக்கம் (=ஈரம்) இல்லா அகம் என்று வருவித்துப் பொருள் கொள்ளப்பட்டது.

உவமானத்தில் வன் என்ற சொல் இருப்பதால் உபமேயத்திலும் வலிய என்று சேர்த்துப், பொருள் உரைக்கப்பட்டது.

ஆர்வத்துக்கு நீர் உவமானம், மரம் தளிர்த்தற்கு நீர் காரணமாதல் போல உயிர் வளர்ச்சிக்கு ஆர்வம் காரணம். ஆர்வம் பெருகப் பெருக அன்பு கனிந்து இன்பம் உண்டாகும். இது

மரத்திற்கு நீர் வார்க்க வார்க்க அது தளிர்த்துத் துளிர்ப்பது போலும்.

வற்றல் மரம்—நாயனார் ஈண்டு மரம் என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். மரம் உயிருள்ளது. உயிரில்லாத மரத்துக்குக் கட்டை என்று பெயர். ஆதலின் வற்றல் மரம் என்பதற்குப் பட்ட கட்டை என்று பொருள் கொள்ளுவது பொருந்தாது. உயிருள்ள மெலிந்த தளிர்த்தல் இல்லாத மரம் என்று பொருள் கொள்ளுவதே பொருத்தம்.

மேலும், நாயனார் 'தளிர்த்தற்று' என்ற சொல்லைப் பயன்படுத்தியதால் உயிருள்ள மெலிந்த மரத்தையே கருத்துட் கொண்டு கழறியுள்ளாரே யொழிய வேறன்று. பட்டமரம் ஒருக்காலும் தளிர்க்காது என்பது உலகறிந்ததொன்று.

குறட்கருத்து

அகமாகிய நிலத்தில் ஆர்வமாகிய நீரைப் பாய்ச்சி, உயிராகிய மரத்தை வளர்த்து, அது மெலிந்து போகாமல் பாதுகாத்து, அன்பாகிய தளிரைத் துளிர்க்கச் செய்து, நட்பாகிய மலர் மலர்ந்து, புகழாகிய மணம் வீச, அருளாகிய காய் காய்க்க, பேரின்பமாகிய கனியை அருந்துதலே உடலோடு கூடிய உயிரின் வாழ்க்கையாகும் என்பதை என்ன அழகாக இரண்டடியில் ஓர் உவமானத்தின்கண் நிறுவிக் காட்டியிருக்கின்றார்!

அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.
அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.
அருளென்னும் அன்பீன் குழவி பொருள்என்னும்
செல்வச் செவிலியான் உண்டு

என்னும் குறட்பாக்களை நோக்குக.

V. மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

பரிமேலழகர் :—ஒருவற்கு நன்மை என்று சொல்லுவர், அறிந்தோர், மனையாளது நற்குண நற்செய்கைகளை; அவை தமக்கு நல்ல அணிகலம் என்று சொல்லுவர் நல்ல புதல்வரைப் பெறுதலை.

மணக்குடியார் :—மனையாள் ஒழுக்கமுடையாள் ஆதலை ஒருவனுக்கு அழகென்று சொல்லுப. நல்ல மக்களைப் பெறுதல் அவ்வழகின் மேலே நல்ல அணிகலன் என்று சொல்லுப.

பரிதியார் :—"மனைமாட்சி மங்கலம், நன் மக்கட்பேறு அதன் நன்கலம் என்ப" (மற்று=அசை) என்பது அந்வயம்.

இதில் நாணோடுகூடிய தாலியை உவமானமாகவும், நன் மக்களோடு கூடிய இல்வாழ்க்கையை உவமேயமாகவும் கூறப் பட்டிருக்கிறது.

இல்லாள் மனையற மாட்சியை உடையவளாய் இருத்தலை **மங்கலநாண்** என்றும் ;

இல்லாள் அறிவுடைய மக்களைப் பெறுதலை அம்மங்கல நாணில் தொங்கும் நன்மையமைந்த அணிகலனாகிய **தாலி** என் றும் ஆன்றோர் கூறுப.

குறிப்பு:—இல்வாழ்க்கை மக்கட்பேறு குறித்துப் பெரு நலம் துய்க்கும் பெற்றித்தாகலின் மக்கட் பேற்றை **நன்கலம்** என்றார் நாயனார்.

நாயனார் **நன்கலம்** என்ற மொழியைப் பயன் படுத்தியுள்ள தால், **மங்கலம்** என்ற மொழிக்கு **மங்கல நாண்** என்று பொருள் கொள்ளுவதே பொருத்தம்.

மங்கலம்—மங்கலி—மங்கலை—சுமங்கலி—சுமங்கலை என்ற வழக்குகளையும் காண்க.

தாலி—தாலு (=தொங்கு) என்னும் பகுதியடியாகப் பிறந்த சொல்.

மனைமாட்சி:—மனைக்குத்தக்க மாண்பும், கணவன் வளத் துக்குத்தக்க வாழ்வும் மனைமாட்சி ஆகும். இதனை,

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்னும் குறளால் அறியலாம்.

(இ-ள்.) பிறந்த குடிக்குத் தகுந்த குணங்களோடு, புகுந்த அகத்துக்குத் தகுந்த மாட்சிமை உடையவளாகி, தன் மனத் தைக் கவர்ந்து கொண்டானாகிய கணவனுடைய வரும்படிக் குத் தகுந்தபடி செலவு செய்து வாழ்கின்றவள் இல்வாழ்க்கைக் குத் துணையாவாள்.

பிறந்த குடியின் குணங்களாவன:—அன்பு, அடக்கம் பொறுமை, இரக்கம், இன்சொல், கல்வி முதலியன.

புகுந்த குடியின் குணங்கள் :—கற்பு, விருந்தோம்பல், கணவற் பேணல், புகழ்புரிதல் முதலியனவாம்.

இவ்வித குணங்களை உடைமையே மனை மாட்சியாகும்.

இசையுங் கொலையும்

[க. ப. சந்தோஷம், பி. ஏ., எல். டி]

இனிதுங் கொடிதும் உறழுங்கொல்? இவனறிவிருந்த வாறென்னை? வள்ளுவப் புத்தேளுள்ளிட்ட ஆன்றோர் பலரும் ஒன்றாய்க் கொடிதென விலக்கிய கொலையெனும் அவுணனை உம்மைத் தொடர்கொண்டு இசையெனு மினிய நங்கையொடு பிணைக்குமிவன் பேதையல்லனோ? என்றிவைபோன்ற ஐயங்கள் பல இவ்வுரையின் தலைப்பைக் கண்ணுறு மன்பருளத்தில் நிகழலாம். "எப்பொருளெத் தன்மைத்தாயினும்....." என்ற மறையை அன்பர்க்கு நினைப்பூட்டி மேற் செல்கின்றேன்.

இசையென்ற சொல்லிற்குப் பலபொருள் உளவேனும், பண், புகழ் என்ற இவ்விரண்டினளவே இவ்வாராய்ச்சி செல்கின்றது. பண்ணைப் பின்னரும் புகழை முன்னரு மாய்தல் ஈண்டுப் பொருத்த முடைத்து.

கனலெரியாகி இயங்கிய ஒருதிரள் பையப் பையக் குளிர்ந்து, நீரும் பாருங் கூடிய வையகமாகிப் பலவாயிர மாண்டுகள் கழிந்தபிறகே உயிர் தோன்றிற்றென்பது அறிவியல்முடிபு முதன் முதல் உயிர் தோன்றிய காலை, நிலத்தின் அமைப்பும், தட்ப வெப்ப நிலையும் மக்களுயிர்க் கேற்றவையா யில்லை; இவ்வையகத்தைச் சூழ்ந்தியங்கிய காற்றும், உயிரினங்களிலுயர்ந்தவை உட்கொள்ளுந் தன்மையதாயிருக்கவில்லை. மேலும், நிலங் குளிர்ந்து, இறுகி, இப்பொழுது நாம் பார்க்கின்ற வையக வமைப்புப் பெரும்பாலும் நிலை பெற்ற பின்னரே மக்கள் தோன்றினர். இன்றும் நிலத்திற்குள் நெருப்புண்டு. இஃது எரிமலைகள் வாயிலாய் ஆங்காங்கு வெளிப்படுகின்றது. குளிர்ந்திருக்கும் நிலவுருண்டையின் மேற்பரப்பு, அதன் குறுக்களவைப் பார்க்குங்கால் மிக மிகச் சிறிது.

குளிர்ந்திறுகிய நிலவுருண்டையின் மேற்பரப்பிற் சிறிது சிறிதாய்ப் பெருகிய மக்கள் அதன் வெவ்வேறு பகுதிகளைத் தம்முடையன வென்று கூறினர். அஞ்ஞான்று தொட்டு இந்நாள்வரை நிலத்தின் பொருட்டு மக்களுக்குள் நேர்ந்திருக்கும் போர்களுக்கு அளவு முண்டோ!

போரென்பது யாது? மக்கள் ஒருவரை யொருவர் எதிர்த்துக் கொல்வது தானே! மக்கள் பெருகியுயர்ந்து அன்பைப் பெருக்கி, அறத்தை வளர்க்கும் பொருட்டு, எரித்திரளாயிருந்த உருண்டை குளிர்ந்து நிலமாயிற்றெனக் கருதுவதற் கிடமிருக்க, ஐயகோ! அவர்கள் ஒருவரை யொருவர் பகைத்து மோதியழிந்து வருவது ஒழிந்த பாடில்லை. எங்கு மியங்குகின்ற போராற்றல் இதற்கோ ஞாலத்தை யாக்கிற்று!

தமிழ் நிலத்திலும் வேறு பன்னிலங்களிலும் போரியற்றிப் புகழ்பெற்ற மன்னர்கள் எண்ணிலர். கணக்கிறந்த மக்களுயிரைப் போக்கிப் புலவராற் பெரிதும் போற்றப்பட்ட வேந்தரும் பிறரும் கொலையாலிசை பெற்றனரென்பது இழுக்காவதெவ்வாறு? பழைய தமிழ் நூல்களைக் கற்கு மொருவரதுள்ளம், ஆண்டுத்தோன்றும் அரிய பலசெய்திகளைக் கண்டுவக்கு மெனினும், தமிழ் மன்னர் ஒருவரையொருவர் பகைத்தெழுந்து இடைவிடாப் பெரும்போர் செய்து மாண்டொழிந்தமையறிந்து குழையாதிராது. இவர்கள் செய்த சண்டைகளில் உயிர் துறந்தோர் தமிழரல்லரோ? தமிழரைத் தமிழர் கொன்று புகழ்பெற்றனரெனின், அஃதிரங்குதற் குரித்தோ, ஏத்துதற் குரித்தோ? தமிழன்னையின் நன் மக்களென்று முன்னிருந்த மன்னர் தம்மை யுணராது கொதித்துக் குதித்துக் கொல்ல விரைந்தது அறியாமையின் பயனன்று. இவ்வாறவர்கள் செய்தது தவறென எடுத்துக்காட்டிய புலவர் அற்றை நாளிலிருந்தனர்; வேந்தர் செவி சாய்த்தாரல்லர். கொலையால் வருமிசையைச் சால விழைந்து தமக்கும் பின்னோர்க்குங் கேடு தேடினர்.

உள்ளத்தைப் புண்படுத்து மிந்நினைவை விட்டு, இசைக்குங் கொலைக்கு முள்ள மற்றொரு இயைபை எடுத்தாய்வாம். கொல்லுத லென்பது முதலில் அமைத்தலென்ற பொருளிலேயே வழங்கிற்று. இஞ்ஞான்றும், 'கொல்லன்' என்ற சொல்லில் அப்பொருள் தோன்றுகின்றது. மருத்துவ நூல்களில் சரக்குகளைக் கொல்வதென்ற ஒரு வழக்குண்டு. நச்சுச் சரக்குகளை மருந்திற்குப் பயன்படும் வகையில் குற்றம் நீக்கியமைத்துக் கொள்ளுதலை அச்சொற்றொடர் குறிக்கும். 'பொற் கொல்லர்,' 'மரங்கொல் தச்சர்,' என்று **சிலப்பதிகாரத்தி**லுள்ள வழக்கினைக் கொண்டும் இப்பொருள் துணியப்படும். **குறுந்தொகை**யில்

"முதைப் புனங் கொன்ற வார்கலி யுழவர்
விதைக்குறு வட்டி போதொடு பொதுளப்
பொழுதோ தான்வந் தன்றே" (155)

என்ற பாவில் 'முதைப்புனங் கொன்ற,' என்ற தொடருக்கு, 'பழங்கொல்லையை உழுத,' என்று பொருள்கொள்ள வேண்டி யிருப்பதால், கொலையென்பது உழுதலையுங் குறிக்கும். உழுதல் எனுங் கருத்து அமைத்தலிலடங்கும்.

பண்டை நாளிற் பயிர் செய்வதற் கேற்ற வண்ணம் நிலத்தையமைப்பது பெரிதும் வருத்தந்தருமொரு வேலையா யிருந்தது. செடிகளும் புதர்களும் நெருங்கி வளர்ந்து மேடு பள்ளமுள்ளவையாய்க் கிடந்த நிலப்பகுதிகளைக் கம்பு, தினை முதலியவற்றை விதைப்பதற்குப் பயன் படுத்திக் கொள்ள மக்கள் எவ்வளவு வருந்தியுழைத்திருக்க வேண்டும்? இரும்பை நாம் விரும்புமொரு கருவியாகச் சமைப்பதற்கு, அதை உலையில்வைத் தெவ்வளவு காய்ச்சிச் சம்மட்டி கொண்டு எத்துணைத் தாக்க வேண்டியிருக்கிறது? காய்ச்சுதல், அடித்தல் என்ற வருத்தந்தரும் வேலைகளைக் கொல்லுதல் எனுஞ் சொல்லி லடக்கி, அவற்றைச் செய்கின்றவனுக்குக் கொல்லன் எனப் பெயரிட்டனர் தொல்லை மாந்தர். இங்ஙனமே, காடழித்து நிலமாக்க வருந்தியுழைக்குந் தொழிலையுங் கொல்லுதலென்றே கொண்டமையான், 'முதைப்புனங் கொன்ற' எனும் வழக் கெழுந்தது. 'உழவு' என்ற சொல்லில் 'வருத்தம்' என்ற கருத்துளது.

'கொல்லுதல்' என்பது சிதைத்தல் என்ற பொருளுடன் குறளில் ஆளப்படுகின்றது. "செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்பதிலதைக் காண்கின்றோம். புறநானூற்று முப்பத்து நான்காம் பாடலிலும் இவ்வாட்சியுளது:

> நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
> செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
> வறம்பா டிற்றே யாயிழை கணவ

ஈண்டுக்காட்டிய இரண்டிடங்களிலும் வந்த சிதைத்தல் என்ற பொருள் நன்றி என்ற உணர்ச்சியை உள்ளத்திலிருந்து நீக்கு தலைக் காட்டிற்று. இத்தகைய சிதைத்தல் நிலத்தை உழுது அதிலுள்ளவற்றை நீக்குதலுடன் ஒன்று படுகின்றமை காணற்குரித்து. புனத்தைக் கொல்லை யென்பதே பெரு வழக்கு. கொல்லப்பட்ட தென்பது அதன் பொருள். நிலத்தைச் சிதைத்தலால் அது கொல்லப்படுகிறது. ஆதலின் இப்பொழுதுள்ள வழக்கைக் கொண்டும் 'கொல்லுதல்' என் பதன் பழையபொருளை உய்த்துணர இடமிருக்கின்றது.

கொல்லை எங்கே கொலை எங்கே? ஆயினுமிவை உறவு கொண்டாடுகின்றன.

இரும்பு, மரம், பொன் ஆகிய இவற்றைத் தொழிலாளி கொண்ட கருத்திற்கிணங்குமாறு செய்தலைப்பற்றிக் கொல்லர், மரங் கொல்தச்சர், பொற்கொல்லர் என்ற பெயர்கள் முறையே எழுந்தனவாதலின், இணக்கல் அல்லது இசைத்தல் என்ற கருத்து கொல்லுதல் என்ற சொல்லில் ஒடுங்கியுளது. கரடு முரடாகவும், வேண்டா உருவினதாகவு முள்ளதைச் செம்மை செய்தல், கொல்லுதல், இசைத்தல் என்று கூறப்பட்டது. இவ்வாறு கொலையும் இசையுங் கூடுகின்றன.

பயன்படுகின்ற நிலத்தைப் பண்ணை என்றும் நன்செய் புன்செய் என்றும் புகல்வது இருவகை வழக்கிலு முண்டு. பண்ணும் செய்யும் ஒருபொருளன. கொல்லப்பட்டது, அல்லது கொல்லுண்டது கொல்லையாயின், பண்ணப்பட்டது பண்ணை செய்யப்பட்டது செய். இங்ஙனம் சொல்லமைத்தனர் முன்னாளில் தமிழர்.

கொல்லுதல் என்ற சொல்லின் பொருள் பண்ணுதல், செய்தல் என்ற சொற்களிற் புகுந்தபின், அச்சொல் இவற்றினின்றும் பிரிந்து உயிரை வாங்குந் தொழிலுக்கே தனிப் பெயராயிற்று.

இனி, இரும்பு, பொன், மரம், நிலம் முதலியவற்றை விட்டு, ஒலிகளை எடுத்துக்கொள்வோமாயின் இவையும் இயற்கையில் முன்னையவைபோல் ஒன்றிற் கொன்று முரண்பட்டனவும், யாம் விரும்பும் வகையிற் கூடாதனவாகவு மிருக்கின்றன. இயற்கையாக நமது குரலிற் பிறக்கும் ஓசைகள் ஒன்றிற் கொன்றிணங்கி இனிமை பயக்குந் தன்மையன வல்ல. இவற்றைக் கொன்று (முரண்பாடொழித்து) ஒன்றுபடுத்துவதனால், ஒழுங்கு செய்வதனால், இணங்கவைத்தலால், இயையக் கோத்தலால், இசை யுண்டாகின்றது. கொல்லுதல் பண்ணுதல் என்ற சொற்கள் பொருளொற்றுமை யுடையனவென்று முன் கண்டோம். ஆதலின், பண் என்ற முதனிலையிலிருந்து இசை என்று பொருள்படும் பண் என்ற சொல்லும், பாண், பாணர், பாட்டு, பாடல் என்ற பல பெயர்களும் பிறந்தன. பாணன் ஒலியாகிய புலத்தை உழுகின்றவன், ஒலியாகிய பொன்னை அமைப்பவன்.

தமிழின் தற்கால நிலையில் தமிழ்மகளிர் செயற்குரிய பணிகள்

[வித்வான் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை]

(கூ0-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், தமிழ் மக்கள் தம் மொழி வளர்ச்சி குறித்துச் செய்யவேண்டுவன யாவை யென்று கொண்டு ஆராயுறின், இக்கட்டுரை வரம்பின்றிப் பெருகுமென்றஞ்சி, மகளிர் செய்யக்கூடிய தொண்டுகள் என வரைசெய்துகொண்டு, தகுவன சில, யாம் அறிந்தவாற்றால் கூறலுறுகின்றேம். ஆடவர் செய்யும் ஆண்மைப்பணி அனைத்திற்கும் நிரம்பிய ஆற்றலும் ஊக்கமும் நல்குவோர் மகளிரேயாவர். ஔவை முதலிய அருந்தமிழ் மகளிர் தமிழ்த்தொண்டு புரிந்து தமிழ் வளம் படுத்த ஞான்று, மிக உயரிய நிலையில் வீற்றிருந்த தமிழன்னை, அவர்கள் பேதையரென்றும், நுண்ணறிவுடையோர் நூலொடு பழகினும் பெண்ணறிவென்பது பேதமைப்பாற் படும் என்றும் சொல்லி அறிவுடையோர் மகளிரைப் புறக்கணித்த இழி செயலால், தன் சிறப்பும் பொலிவுமிழந்து பிறமொழிகட்கு அடிமையாயினள். தமிழ்மக்களும் அகஞ்சுவர் இருக்கப் புறஞ்சுவர் பொலிவிக்கும் புல்லியோரைப்போல ஆயினர்.

"மண்ணாள் வேந்தர்க்குக் கண்ணென வகுத்த, நீதி நன்னூல் ஓதிய நாவினள்" எனக் கோங்குவேளிர் கூறியது போல, அரசியல் நீதி நூல்களும், பொருணூல்களும் பிற நூல்களும் மகளிர் நிரம்பக் கற்றுப் புலமை யெய்துவதோடு, தமிழ்ப்புலமையும் சிறக்கப்பெறுதல் வேண்டும். மக்களைப் பயந்து மழலைமொழி பயில்வித்துச் சிறார்களை மக்களாக்கும் பணி மகளிர்க்கே சிறப்பவுரியது. அதனால், ஆண்டுப் பயில வழங்கும் தாய்மொழியில், தாயர் புலமையுடையராதல் தனிச் சிறப்பாகும். ஆதலால், மகளிர் அனைவரும் தாய்மொழிப் பயிற்சியினையே பெரிதும் பெறற்கு முயலுதல் வேண்டும். அதனால், நம் தமிழ் நாட்டுத் தமிழ் மகளிர் 'தமிழ் நாட்டுத் தமிழ்ப் பெருமகளிர் தாங்கள்" என்பதைத் தாமே யுணர்ந்து, பிறரும் உணர்ந்து வியக்குமாறு, வீறுகொண்டெழுதல் வேண்டுமெனத் தமிழ்நாட்டுப் பெண்ணுலகினை வணங்கி வேண்டிக்கொள்கின்றேம்.

அறிவுத்துறையில் மேன்மையுற்றிருக்கும் நாடுகளில், மக்கள், தம் சிறுவர்களின் இளமையினை மிகக்கண்ணுங் கருத்துமாய்க் குறித்து, அப்போதே, அவர்தம் அறிவு செம்மை நெறியில் வளரவேண்டும் என்று முயல்கின்றனர். சிறார்கள் சிறிது பேசத்தொடங்கியதும், பாட்டிசைப்பதில் பெரிதும் விருப்புற்றிருப்பதை யுணர்ந்து, அவர்கட்கேற்ற பாட்டுக்களைப் பாடியிருக்கின்றனர். நம் நாட்டு மகளிரும் தம் சிறு குழந்தைகட்குப் பல பாட்டுக்களைப் பாடி மகிழ்ச்சி யூட்டுகின்றனரெனினும் அவை திருந்திய முறையில் வருதல் வேண்டும். தாயர் பலரும் கல்வியறிவு இல்லாதிருத்தலின், அப்பாட்டுக்கள் செந்நிலை யெய்தாமல் இருக்கின்றன. மேலும், நம் நாட்டு மகளிர் இனிய தூய பாட்டுக்கள் தாமே இயற்றுவதில் சிறந்தவராவர். யாவரேனும் ஒருவர் தம் குடும்பத்தில் இறந்து போவரேல், அவருக்காக இம்மகளிர் தாமே புனைந்து பாடும் "ஒப்பாரிகளை" நுனித்து நோக்கின், இவர்கள் இனிய பாட்டுக்களைப் புனைதலில் தலைசிறந்த வன்மை யுடையர் என்பது விளங்கும். இவ்வன்மையை இவர்கள், சிறுவர்கட்குரிய அறிவு வளர்ச்சித் துறையிற் செலுத்திப் பாடத் தொடங்குவரேல், தமிழ்க் குழந்தைகள் மிக்க அறிவு நலம் பெறுவர் என்று உறுதி கூறலாம். படித்த பெண்ணொருத்தி தான் பயந்த குழந்தையைக் கையிலேந்தி, தன் வீட்டின் தோட்டத்திலிருந்து பாடிக்கொண்டிருந்த பாட்டொன்றைக் கீழே தருதும் :

"தோட்டத்திலே முல்லை
தோன்றியதுன் பல்லைக்
காட்டியதுன் சொல்லை
காட்டியது கிள்ளை"

"அம்மா(ள்) கொஞ்சம் பாச்சி
அடுப்பில் (வைத்துக்) காய்ச்சி
கும்மாளமாய்ப் பே(ச்)சிக்
கொடுத்தா(ள்)பசி போச்சி"

இவ்வாறு அழகிய மழலைப் பாட்டுக்கள் (Nursery rhymes) பலவற்றை ஆக்கக்கூடிய தமிழ்வன்மையை மகளிர் பெறுதல் வேண்டும். இப்பாட்டுக்களையும் இம்மகளிரே புனைதல் வேண்டும். மேனாட்டவருள்ளும் இன்னோரன்ன பாட்டுக்களுள் பெரும்பாலனவற்றை மகளிரே யாத்திருக்கின்றனர். இப்பாட்டுக்கள் தாமும் இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள், சிறுகதைகள் என்ற இவற்றைப் பொருளாகக்

கொண்டிருத்தல்வேண்டும். நீராடற்கும், நெற்குற்றுதற்கும், பூக்கொய்தற்கும், பொற்சுண்ணமிடித்தற்கும் பாட்டிசைத்துப் பண்புமேம்பட்டிருந்த தமிழ்மகளிர்க்கு இவை அரிய வல்ல; இவற்றை ஆக்கிக் கற்பித்துப்பாடி மகிழ்தற்குரிய தமிழ்ப்பயிற்சி இவர்பால் ஆர இல்லாமையே காரணம். இனியேனும் மகளிர் இப்பணியில் இறங்கித் தம் கடமையை ஆற்றுபவராதல் வேண்டும்.

எழுத்தறிவிக்கும் தொடக்கப் பாடசாலைக் கல்விக்கு இம்மகளிர் ஆற்றக்கூடிய பெருந்தொண்டு ஒன்றுஉளது. அத்தொண்டு இல்லாமையால், நம் நாட்டில் தொடக்கக் கல்வி வளம்பெறாது சீர்குலைந்து நிற்கிறது.

இளஞ்சிறார்கள் பிறந்து மொழி பயின்று வருங்காலத்து அவரோடு உடனிருந்து, உடன் மொழிந்து, உடன் பயின்று ஒழுகும் ஒழுக்கச் சிறப்பு மகளிர்க்கே பெரிதும் உண்டு. அம்மகளிர் தமிழறிவு பெருக வுடையராயின், அச்சிறுவர்கள் மொழி பயிலத் தொடங்குவதுமுதல் தம் கருத்துக்களை ஒருவாறு வெளியிடத் தொடங்குவது வரையில் அவர் சொல்வழக்கில் வரும் சொற்களை அவ்வப்போது குறித்து, காலந்தோறும் அவை அவர் வழக்கில் இடம்பெறும் தகுதிக்கேற்ப, வகைப்படுத்தி வருவது ஒன்று. பின்னர், அச்சொற்களே வர, மழலைப் பாட்டும் கதையும் புனைந்து பேசப் பயிற்சி செய்வது ஒன்று. இன்னோரன்ன பணிகள் மக்களின் கல்விப் பயிற்சிக்குப் பெருந்துணை நல்குவனவாகும். மக்களின் செல்வநிலைக்கேற்ப, சிறுவர்களின் தகுதிப்பாடு வேறுபடும். அதனால், அவ்வந்நிலையிலுள்ள குடும்பப் பெண்கள் இப்பணியினையாற்றின், கல்வி வளர்ச்சி வளம்பெறும். செல்வ நலம் மிக்குள்ள நாடுகளில், இவ்விளஞ் சிறார்களை ஒருங்கு தொகுத்து இப்பணி புரிவித்தல் எளிதில் இயலும் அந்நலம் குறைந்துள்ள நம் நாட்டில், மகளிரே இப் பெரும் பணியினை ஆற்றுதல் நலமாகும். இத்தகைய தொண்டெல்லாம் இனிது செய்தற்குரிய அறிவமைதி, பெருங்கல்வி யறிவு பெற்றவர்க்கே இனிது கைகூடுவதாகும். ஆதலால், இந்நிலைமையினை இயல்பாகவே வாய்க்கப்பெற்ற மகளிர், நிரம்பிய கல்வியறிவு பெற்றுத் தம் மக்களின் அறிவு வளர்ச்சிப் பணியாகிய இதற்குத் துணை செய்யவேண்டுமென விழைகின்றேம். பேரறிவும் உண்மை யுழைப்புமுடைய ஆசிரியன்மார் இத்துறையில் உழைத்துத் துணைபுரிய முற்படுவரேல், "அஃது அவர் யாப்பினுள் அட்டிய நீர்" என்பேம்.

தமிழ் மகளிர் தங்கள் குடும்பப் பண்டை வரலாறுகளை யும், தமிழ் நாட்டின் வரலாறுகளையும் கற்றும் கேட்டும் புலமை மிக்கவராய் இருத்தல் வேண்டும். அதனால், அவர்கள் தம் வயிற்றிற் பிறக்கும் சிறார்கட்கு அறிவும் வீரவுணர்ச்சியும், வினைத்திட்பமும், அவ்வரலாறுகள் வாயிலாக வூட்டி உண்மைத் தமிழ் நன்மக்களாகச் செய்தல் முடியும். இக்காலத் தமிழ்ச் சிறுவன் ஒருவனை விளித்து, "உன் தந்தைக்குத் தந்தை செய்த அருஞ்செயல் யாது? அவரது பெற்றோர் பெயர் என்னை? உங்கள் முன்னோருள் மிக்க சிறப்புற்றிருந்தவர் எவரேனும் உளரோ?" என்பன போன்றவற்றை வினவின், அவன் அறியாது மருள விழித்தலைக் காண்கின்றோம். ஆங்கில நன்மகன் ஒருவனை வினவின், அவன் தன் முன்னோர் வரலாற்றையும், செய்த செயல் வகைகளையும் பெருமிதத்தோடு சொல்லக் கேட்கின்றோம். அவற்றைக் கூறும்போது அவன் முகத்திலும், விழியிலும், உடலிலும் தோன்றும் ஒளியும், மெய்ப்பாடும், அவ்வுணர்ச்சி எத்துணைப் பெரும் பயனை அவனது வாழ்விற்கும் ஆக்கத்திற்கும் உதவுகின்றதென்பதனை இனிது காட்டுகின்றன. மூதின்முல்லை, ஏறாண்முல்லை, வல்லாண்முல்லை யென்பனவாகிய துறை வகுத்து, ஆடவர் மகளிர் என்ற இருபாலார் வீரமும், குடிப்பிறந்தார் வீரமும், அவர் தம் ஊரவர் வீரமும் உயர்த்திப் பேசி மறஞ்செருக்கி விளங்கியவர் தமிழ் நன்மக்கள். "முந்தை முதல்வர் கல்தான் காட்டி, மூதில் மடவாள், தன் புதல்வனைச் செல்க என்றாள் போர்க்கு" என்றும், "கல் நின்றான் எந்தை, கணவன் களப் பட்டான்,—முன் நின்று மொய்யவிந்தார் என்னையர்—பின் நின்று, கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி, எய்போல் கிடந்தான் என் ஏறு" என்றும் வரும் பழம் பாடல்கள், தமிழ் மகளிர்க்கு இப்பயிற்சி புதுவதன்று; பண்டேயுள்ளது என்று யாவரும் அறிய விளக்குகின்றன.

(தொடரும்)

கட்டுரைத்த கனவு

வித்வான் ஆ. சிதம்பரம்

தோற்றுவாய்

ஒருநாள் இரவு வீரமணி வீட்டில், கடிகாரம் டாங் டாங் என மணி எட்டு அடித்தது. அவன் மனைவி பொன்மணி தனது இரண்டு குழந்தைகளையும் உணவுண்ணச் செய்தனள். அதன்பின், அவர்கட்குச் சிறிது நேரம் பாடம் கற்பித்துச் சிலப்பதிகாரக் கதையைக் கூறிக் கொண்டிருந்தாள். குழந்தைகள் இருவரும் தூங்கத் துவங்கினர். உடனே அவர்களைப் படுக்கச் செய்தாள். வெளியில் உலாவச் சென்ற வீரமணியோ இன்னும் வரவில்லை. இதுவரை குழந்தைகளுடன் பேசித் தன் பிரிவுத் துன்பத்தை ஆற்றியிருந்த பொன்மணி கடிகாரத்தை நோக்கினாள். மணி ஒன்பது அடிக்க இன்னும் ஐந்து வினாடிகளே உள்ளன என்பதை அறிந்தாள். அறிந்த அவள் "கணவனைப் பிரிந்த காரிகையர்க்கு ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு ஊழியே. பிரிவெனும் நெருப்பு பெண்களையே பெரிதும் வெதுப்பும். அதனினும் பிரிவு அவர்கட்கு இரவில் நேருமாயின் அக்கொடுந்துன்பம் கூறுந்தரமன்று. இங்ஙனமாக, இவ்விரவில் எனது தலைவர் என்னை விட்டுப் பிரிந்து எங்கோ சென்றிருக்கின்றாரே! இவ்வாறு என்னைப் பிரிந்து செல்ல அவர் மனம் இரும்போ! அல்லது கல்லோ! வேறெதுவோ!" என்று கூறிப் பலப் பலவாறு புலம்பினாள். மணி பத்துக்கு மேலும் ஆயிற்று. பிரிவுக் கவலையில் ஆழ்ந்து, காம நோயால் வருந்துபவள் மணி பத்து அடித்ததையும் அறியவில்லை. மணி ஆக ஆக மங்கையின் துன்பமும் மிகுவதாயிற்று. ஆற்ற முடியாத விரக நோயடைந்த அவ்வணங்கு, எனது காதற் கணவன் என்னைக் களவில் மணந்த அக்காலத்து என்னை நோக்கி, "நின்னைப் பிரியேன்; பிரியின் ஆற்றேன்; நின்னையன்றிப் பிற நங்கையரைக் கனவிலுங் கருதேன்" என்று கூறியதெல்லாம் வெறும் பசப்புரையே போலும். ஆடவர்களே மிகக் கொடியர் கொல்! பொய்யர் கொல்! வஞ்சகர் கொல்! ஆடவர் மட்டும் கற்பு நெறி பிறழலாமா? அவர்க்கும் என்று கட்டாயப் படுத்தப்படுகிறதோ அன்றே இன்ப நாளாகும்; என்று பலவாறு கழறிக் கொண்டு புலம்பிப் புலம்பி இரவெல்லாம் ஏக்கத்தில்

ஆழ்ந்திருந்தாள். ஆற்றொணுப் பெருந்துயரில் ஆழ்ந்திருந்த அவள் வைகறைப் பொழுது வந்ததையும் அறியாது இருந்தனள். பின் அறிந்த பொன்மணி, "இனி எனது நாயகன் வந்தாலும் யாது பயன்? விடியும் நிலையிலுள்ள இச்சிறு பொழுதில் யான் அவருடன் நுகரும் இன்பந்தான் எத்துணைய! ஐயகோ! இவ்வாறு நலிவுறுத்திய நாயகனைக் காண்டலும் பெருந்துன்பமே" என்று கூறியவளாய் மிகவும் பிணங்கித் தன் படுக்கையிற் படுத்துப் பொய்த்துயில் கொண்டனள்.

இவள் இங்ஙனமிருக்கப் பொன்மணியின் காதற் கணவன் வீரமணி நகர்ப் புறத்தே உலாவச் சென்றிருந்தான். அங்குத் தங்கம் என்ற விலை நங்கையின் வெளி அழகிலும் வெறும் பசப்புப் பேச்சிலும் ஈடுபட்டு மனம் மயங்கி, அவளை முயங்கித் தன்னை மறந்து இருந்தான். விடியற்பொழுது வந்தது. "புள்ளினம் ஆர்த்தன; ஆர்த்தன முரசம்; பொங்கிய வெண்கல மணியினின்னோசை; வெள்ளிய சங்கம் முழங்கின அம்ம! விழித்தனர் மடியிலா மாந்தர்கள் பலரும்". இவ்வாறாக நிகழும் வைகறை நிகழ்ச்சிகளால் எழுப்பப்பட்ட வீரமணி, எழுந்து திடுக்கிட்டான். தன்னை நினைந்தான், தன் தலைவியை நினைந்தான். விரைந்து இல்லத்திற்குப் புறப்பட்டான். இல்லத்தை அடைந்தவன், பொங்கிய துன்பத்தில் பொன்மணி ஆழ்ந்து மெல்லணையிற் பொய்த்துயில் கொண்டிருப்பதைக் கண்டான். அவனது காதற் கொழுந்தாகிய அவளோ, இன்முகங் காட்டிலள்; இன்னுரையாடிலள்; எழுந்திலள்; அணைத்திலள்; இங்ஙன மிருந்தாள். இந்நிலை கண்ட வீரமணி தன் தலைவி தன் மேற் பிணங்கினள் என்பதை அறிந்தான். பாணர் முதலிய பல்லோர் வாயிலாக அவளது பிணக்கைத் தீர்க்க முயன்றான். பயன் யாதுமில்லை. முடிவில் தானே தன் மனைவியிடம் சென்றான். சென்ற அவன் அவள் பிணக்கைத் தீர்க்க முயன்றான். அவள் பிணக்கைத் தீர்க்க வழியாது? என்று ஆழ்ந்து எண்ணினான். எண்ணிய அவன் எழுச்சி கொண்டான். பொய்த்துயில் கொண்டுள்ள பொன்மணியை நோக்கிப் புன்னகை பூத்தவனாய்:—

"புனவளர் பூங்கொடி யன்னாய்! கழியக்
கனவெனப் பட்டதோர் காரிகை நீர்த்தே!
முயங்கிய நல்லார் முலையிடை மூழ்கி
மயங்கிமற் றுண்டாண்டுச் சேறலுஞ் செல்லா
துயங்கி யிருந்தார்க் குயர்ந்த பொருளு
மரிதி னறஞ்செய்யா வான்றோ ருலகு

முரிதி னொருதலை யெய்தலும் வீழ்வார்ப்
பிரிதலு மாங்கே புணர்தலுந் தம்மிற்
றருத றகையாதான்; மற்று,
நனவினாற் போலு நறுநுதா லல்கற்
கனவினாற் சென்றேன் கலிகெழு கூடல்,
வரையுறழ் நீண்மதில் வாய்சூழ்ந்த வையைக்
கரையணி காவி னகத்து"

கனவின் சிறப்பு

வீர:—"கானில் வளர்ந்த காதற் கொடியே! என்ன அழகிய கனவு; கனவின் சிறப்பை யாரே அறிவர்; கனவென்பதே ஒரு தனி அழகு. இன்பங் கொடுக்கும் இளங் கொடியே! பொருள் வருந்தி உழைத்தவனுக்கே கிடைக்கும். உழைக்காதவர்க்கும் பொருள் தானே அவரவர்தம் இடத்திற்குச் சென்று பொருந்துதல் இல்லை. இங்ஙனமாகப் பொருளின் முற்பட்ட அறமோ, பொருள் இன்றி இயலாது. பொருளே அரிதாக இருக்கும் பொழுது அறம் யாண்டு நிகழும்? அன்றியும் அறத்தைச் செய்தல் தான் கனவிடத்தும் நிகழப் பெறுவதில்லை. ஆனால், இன்பமோ அப்படியல்ல. கணவன் மார்பில் முயங்கி மயங்கி இன்பம் நுகர்ந்த காதலியே அக்கணவனுடன் பிணங்குதலும், அப்பொழுதே அப் பிணக்குத் தீர்ந்து இருவருங் கூடி மகிழும் எல்லையில் இன்பமும், இவ்வுலகில் யாவராலும் பரக்கக் காணப்பட்டதன்றோ! அம்மட்டோ! அவ்வின்பக் காட்சி நனவிற் போலக் கனவிலுங் கிடைக்கிறது. நான் ஏதோ வாய்க்கு வந்தபடி பேசுகின்றேன் என்று நினையாதே! நலந்திகழ் நுதலினாய்! யான் இவ் விரவிலே நனவில் நிகழ்ந்தது போல ஒரு கனாக் கண்டேன். ஆ! அக் கனவை நினைந்தாலே எனக்கு ஒருவித உணர்ச்சி உண்டாகின்றது. ஆருயிரே! அக்கனவு இது:— நமது மதுரையோ பகலிற் போலவே இரவிலும் பேரொலி கொண்டது. அத்தகைய ஒலிமிக்க மதுரையைக் கடந்து வெளியிற் சென்றேன். பின்னர் நகரச் சுற்று மதிலைச் சூழ்ந்துள்ள வையைக் கரையின் சோலைக்குச் சென்றேன்"

என்று கூறிப் பொன்மணியின் பொய்த்துயிலை அறிவதன் பொருட்டு வீரமணி தன் கனவுரையை நிறுத்தினான். நிறுத்திய அளவில் பொன்மணி கண்களை மூடிக் கொண்டே வருத்தம் நிறைந்த சினத்துடன்—

"உரையினி,
தண்டாத் தீஞ்சாய னெடுந்தகா யவ்வழிக்
கண்ட தெவன் மற்று நீ"

"நிலையாத இனிமைத் தன்மை வாய்ந்த பெரியோரே! நீவிர் கனவில் மதுரையின் மதிலைச் சூழ்ந்து செல்லும் வையை யாற்றுச் சோலைக்குச் சென்றீரே! அச்சோலையில் நீவிர் கண்டது யாது? கூறுக!" என்றாள்.

பிணக்கைத் தீர்க்க வகை தேடி, அது தீர்க்கப் பொய்க் கனவு கூறத் துவங்கிய வீரமணி தனது மனைவி திருவாய் மலர்ந்தருளிய வகையில், பெரிதும் மகிழ்ந்து தான் விரும்பிய வாறு இக் கட்டுரைக் கனவு பிணக்கைப் போக்கும் எனத் தெரிந்தவனாய், மேலும் கனாத்திறத்தைக் கட்டுரைக்கலானான். வீரமணி தன் காதலியை நோக்கி,

"கண்டது, உடனமர் ஆயமொ டவ்விசும் பாயு
மடநடை மாயின மந்தி யமையத்
திடன்விட் டியங்கா விமையத் தொருபா
லிறைகொண் டிருந்தன்ன நல்லாரைக் கண்டேன்
றுறைகொண் டுயர்மணன்மேல் ஒன்றி நிறைவதை"

"பொன்மணி! கனவில் யான் கண்டதைக் கூறுகிறேன் கேள். வையை யாற்றின் ஒரு புறத்தில் ஒரு பெரு மணன் மேடு காணப்பட்டது. அது மிக வெண்மையாக இருந்தது. அம்மேட்டில் பெண்கள் தோழிமாருடன் நிறைந்திருந்தனர். அங்ஙனம் அவர் இருந்த காட்சியைக்காணக் கண்கள் பல்லா யிரம் வேண்டும். அன்னங்கள் இமயமலையை விட்டு எப் பொழுதும் நீங்கா என்பதை நீ அறிவாயன்றே! அத்தகைய மலையின் ஒருபக்கத்தே இறைகொண்ட களைப்பினால் விண்ணில் மெல்லப் பறக்கும் இள நடை அன்னங்கள் மாலைக்காலத்தே தங்கியிருந்தன போல வெண் மணற் குன்றிற் பெண்கள் விளங் கினர்" என்று வீரமணி கூறிக் கொண்டிருக்கும் போதே பொன்மணி சிறிது சினங்கொண்டு வீரமணியை நோக்கி,

"ஓர்த்த திசைக்கும் பறைபோனின் னெஞ்சத்து
வேட்டதே கண்டாய் கனா"

"நன்று! நன்று! நுமது செய்கை; இக்கனவை நீவிர் கூறுந்திறம், கள்ளுண்டு களித்தா னொருவன் பிறர் கேளாத பொழுதே மிக மிக உடல் தள்ளாடியவனாய் 'நான் கள் குடித்தேனென்று நினைக்கிறீர்களா என்ன?' என்று கூறித் தான் குடித்ததை வெளிப்படுத்துவது போல வல்லவா உள்ளது. அன்றியும்

மத்தளங் கொட்டுகிறவன் மனத்துட் கொண்ட ஒலியல்லவா மத்தளத்தில் முழங்குவது. அது போலவே, நீவிரும் நும் மனத்து விரும்பிய பல விலை மகளிர் பகட் டின்பத்தையே கனவாகக் கண்டீர்! இதில் வியப்பென்னை? வெண்மணற் குன்றில் பெண்கள் இருந்ததை இவ்வளவு நன்றாக உற்று நோக்கி அழகாகக் கற்பனையும் செய்கிறீர்களோ?" என்றனள்.

"கேட்டை,

விரையணி மற்று வெகுள்வா யுரையாண்
டிதுவாகு மின்னகை நல்லாய் பொதுவாகத்
தாங்கொடி யன்ன தகையா ரெழுந்ததோர்
பூங்கொடி வாங்கி யிணர்கொய்ய வாங்கே
சினையலர் வேம்பின் பொருப்பன் பொருத
முனையரண் போல வுடைந்தகன்றக் காவிற்
றினைவரி வண்டி னினம்"

அது கேட்ட வீரமணி தன் மனைவியை நோக்கிப், "பாவாய்! விரையாதே கேள்; முற்றுங் கேட்ட பின் என்மேற் சினமாவது அன்றி வேறேதாவது கொள்" என்றனன்.

பொன்:—"நன்று! நீவிர் நுமது கனவைக் கூறுவீராக" என்றாள்.

வீர:—(தன் மங்கைநல்லாளை நோக்கி) "பெண்ணரசி! அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறுவேன் கேள். பூங்கொடி யனைய நங்கைமார் அனைவரும் அப் பொழிலிடத்துள்ள ஒரு பூங்கொடியை வளைத்து அதிலுள்ள பூக்களைப் பறிக்கத் துவங்கினர். துவங்கியவுடன், பாண்டியன் பொருத பகைப்புலக் கோட்டையே போலத் திரண்ட வண்டுக் கூட்டம் சிதறியது. சிதறிய வண்டுக் கூட்டம் பெண்களைப் படுத்திய பாட்டை என்னென் றுரைப்பது?

மற்றாங்கே,

நேரிணர் மூசிய வண்டெல்லா மவ்வழிக்
காரிகை நல்லார் நலங்கவர்ந் துண்பபோ
லோராங் காங்க மூச வவருள்
ஒருத்தி, செயலமை கோதை நகை
ஒருத்தி, யிகலார் செருவிற் றொடியொடு தட்ப
ஒருத்தி, தெரிமுத்தஞ் சேர்ந்த திலதம்
ஒருத்தி, யடி தாழ் கலிங்கந் தழீஇ யொருகை
முடிதா ழிருங்கூந்தல் பற்றிப்பூ வேய்ந்த
கடிகயம் பாயு மலர்ந்து.
ஒருத்தி, கணங் கொண்டவை மூசக் கையாற்றாள் பூண்ட
மணங் கமழ் கோதை பரிவு கொண் டோச்சி
வணங்கு காழ் வங்கம் புகும்"

“நங்கையரின் நலத்தைக் கொள்ளை கொள்வது போல வண்டுகள் மொய்த்தன. மொய்த்த வண்டுகளைத் துரத்த நங்கையர் செய்த போரின் அழகே அழகு. ஒருத்தியின் தோள் வளையில் மற்றொருத்தியின் பூமாலையும் முத்துமாலையும் பிணைந்தன. ஒருத்தியின் குண்டலத்தோடு மற்றொருத்தியின் தலையிலணியும் முத்துமாலை சிக்கிக் கொண்டது. ஒருத்தியின் இடைச் சீலையை மற்றொருத்தியின் காற்சிலம்பிலுள்ள மீன் வடிவான பொருத்துகள் தளைத்துக் கொண்டன. கணவனுடன் ஊடித் தழுவ மறுத்தவள் வண்டின் பூசலாலே அவன் மார்பகத்தே முயங்கிப் பொதிந்தனள். ஒருத்தியின் இடைப் புடவை அவிழ்ந்து நெகிழ்ந்து கொண்டிருக்கிறது. அவள் அந்நிலையில் ஒரு கையாற் புடவையைப் பற்றினள். அதன் மேலுங் கூந்தல் அவிழ்ந்தது. மற்றொரு கையாற் கூந்தலைப் பற்றினாள். இந்நிலையில் வண்டுகளும் அவள்மீது மொய்த்தன. வண்டுகளுடன் போராட வழி யற்றவளாய்ப் பூங்குளத்திற் பாய்ந்து புகுந்தாள். மற்றொருத்தி, வண்டுகள் கூட்டமாக மொய்த்தலால் ஓட்ட முடியாதவளாய் மணங்கமழும் மாலையை அறுத்து அதனால் ஓட்டினாள். அதற்கும் அவை போகாமை கண்டு வளைந்த வலிய ஓடத்திலே புகுந்தனள்.

ஒருத்தி,

இறந்த களியா னிதழ்பு மறைந்த கண்ணள்
பறந்தவை மூசக் கடிவாள் கடியு
மிடந்தேற்றாள் சோர்ந்தனள் கை
ஆங்க,

கடிகாவிற் காலொற்ற வொல்கி யொசியாக்
கொடி கொடி தம்மிற் பிணங்கி யவைபோற்
றெரியிழை யார்ப்ப மயங்கி யிரிவுற்றார் வண்டிற்கு
வண்டல் வரக்கண்டேன் யான்.

“இன்ப வைப்பே! இன்னுங் கேள்; கள் தன்னைக் காதலித்தவர்களின் அறிவைக் கொள்ளைகொண்டு விடுமல்லவா? ஒரு நங்கை கள்ளை மிகுதியாகக் குடித்து மயக்க மகிழ்ச்சியில் ஆழ்ந்தனள். அவளுடைய இமைகள் மூடின. கண் பார்வை மறைந்தது. இந்நிலையில் மொய்க்கும் வண்டுகளை விரட்ட இயலாதவளாய்க் கைசோர்ந்தாள். இவைகளைக் கண்டு யானும் மனம் உருகினேன். விளையாட்டு விருப்பமைந்த நல்லார் கொடியுங் கொடியும் பிணைந்த தொப்பத் தாம் பூங்கொடியை வளைத்து மலர் பறித்தனர். பறித்த அவர் வண்டுகட்குக் கேடு செய்ததால் அவை இவர்களைப் பெரும்பாடு படுத்தி விட்டதே

என்று நினைத்துத் துன்புற்றிருந்தேன். வைகறை ஒலிகள் என்னை எழுப்பி விட்டன. விழித்தேன். சுற்றி முற்றும் பார்த்தேன்; மணற் குன்றுங் காணேன்; வையைக் கரைப் பொழிலுங்காணேன்; நங்கையர் கூட்டமுங் காணேன்; வண்டுகள் ஆரவாரமுங் காணேன்; ஆனால் எனது முகம் துன்பம் நிறைந்து கவலைகொண்ட குறிப்பை உணர்ந்தேன். எனது அழுகை நீரால் தலையணையெல்லாம் நனைந்திருந்தது. யான் கண்ட கனாத்திறம் இது; நன்றோ! சொல்!'' என்றனன்.

நின்னைநின் பெண்டிர் புலந்தனவு நீயவர்
முன்னடி யொல்கி யுணர்த்தினவும் பன்மாண்
கனவின் றலையிட் டுரையல் சினை இயான்
செய்வதி லென்பதோ கூறு.

பொன்மணி :—(அதுகேட்டு) "ஆ! ஆ! மிக மிக நன்று! இக்கனவின் றிறம் எனக்குத் தெரியாதா? உம்மிடம் உமது பெண்டிர் பிணங்கியது—நீவிர் அவரடியில் வீழ்ந்து வணங்கியது—உமது வணக்கத்தைப் பெற்ற அவர் ஊடல் தீர்ந்தது—பின் கூடிக் குலாவியது. இவைதாம் நீவிர் கூறிய கனாத்திறம். உண்மையில் நிகழ்ந்த இவற்றைக் கனவென்று கட்டுரைத்தால் யான் சினந்தணிந்து உம்மை ஏதுஞ் செய்யேன் என்பது கருதியேயோ நீவிர் இவ்வாறு கழறுதிர்'' என்றனள்.

"பொய் கூறேன்,

அன்ன வகையால் யான் கண்ட கனவுதான்
னன்வாயாக் காண்டை நறுநுதால் பன்மாணுங்
கூடிப் புணர்ந்தீர் பிரியன்மி னீடிப்
பிரிந்தீர்! புணர்தம்மி னென்பன போல
விரும்பவிழ் பூஞ்சினை தோறு மிருங்குயி
லானா தகவும் பொழுதினான் மேவர
நான்மாடக் கூடன் மகளிரு மைந்தருந்
தேனிமிர் காவிற் புணர்ந்திருந் தாடுமோ
ரானா விருப்போ டணியுயர்பு காமற்கு
வேனில் விருந்தெதிர் கொண்டு."

இது பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன் வாயில் பெறாது ஆற்றாமை வாயிலாகப் புக்குத், தலைவியை நயப்பித்தல் காரணமாகத் தெய்வ மகளிர் பொய்தலயர்வதோர் கனாக்கண்டேன்; அது நன்வாயாப் பருவம் வந்து இறுத்தது பாராயென ஊடல் தீர்வது பயனாகத் தலைவிக்குக் கூறியது.

வீர :—(தன் தலைவியை நோக்கி) "ஆருயிரே! யான் பொய் புகலேன். கருங்குயில்கள் பூங்கொம்பரில் பாங்குற அமர்ந்து கூவுதலைக் கேள். அக்கூவுதல் மாண்புடன் புணர்ந்த நீவிர் மாழ்கிப் பிரியாதீர். விரைவிற் கூடுமின்! கூடி மகிழ்மின் என்று அறிவிப்பது போன்றல்லவா இருக்கின்றது. பொழுதோ இளவேனில். கூடன் மகளிரும் அவர்தந் தலைவரும் காமற்கு விருந்திட வண்டினமொலிக்கும் வளமிகு பொழிலில் ஆடுவர்; பாடுவர்; அணிகளை அணிவர்; அதிற் பிரிதலும் பின்னர்ப் புணர்தலும் நிகழ்வது தானே. ஆதலின் நீயும் இதனை நெஞ்சிற் கொள்வாய்" என்றனன்.

வீரமணியின் ஆரமுத மொழிகளை நுகர்ந்த பொன்மணியும் ஊடல் தீர்ந்தாள். மனந்திணிந்த காதலுடன் வீரமணியை இறுக முயங்கி இன்பத்தில் ஆழ்ந்தனள்.*

முகில்

விண்படர் முகிலே! விண்படர் முகிலே!
மண்ணிடர் மாய்க்கும் விண்படர் முகிலே!
விண்படர்ந் தேகுவை யெனினும் மண்ணிடை
எண்ணி லுயிர்க்கும் உண்ணமிழ் தீவை.
வளத்திற் சிறந்து வானுற வளர்ந்து,
களைத்து வருமுளர் களிக்க நிழலும்,
மணமும், மலரும், கனியும் நல்கும்
பொழில் வறங் கூரப், புள்ளினம் புலம்புற,
எழில்பெறு பொய்கை யின்மை யெய்தக்,
கழையுலர்ந் தெரியக், கள்ளி கரியக்,
கொடுஞ் செயல் புரியுங் கோடை வேங்கைக்
கடுங்குர லெழுப்பிக் கொடுஞ்சிலை வளைத்து,
நெடுங்கணை வெண்டுளி நிரல்படச் சொரிந்து,
கொன்று, வென்றி கொண்டு முறைசெய்
தனைத்துயி ரினையும் அளிப்பை யெனினும்
பெய்துழிப் பெய்து பெருவளம் படுப்பை;
பொய்த்துழிப் பொய்த்துப் புலம்பு மிகுப்பை.
முடி பெறு தமிழ்மூ வேந்தரின்
குடி முறை கண்டிலை வடிமிக வுடைத்தே.

—வித்துவான் பெ. கோவிந்தன்.

---

* இது கலித்தொகை மருதக்கலி 27-ஆம் செய்யுளைத்தழுவி எழுதப்பட்டது.

பாணர்

[பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்]

(முன் கஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

பாணர் தீண்டாதார் அல்லது தாழ்ந்தோராகவே அரசரிடத்தும் பெருமக்களிடத்தும் அண்டமுடியாது போயிற்று. இவ்விழிவு திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருப்பாணாழ்வார் போன்ற அடியார்களைக்கூட அடுத்தமை அவர்கள் சரித்திரங்களிற் காணலாம். பாணர் வாய்ப்பாட்டையும் யாழையும் ஊக்குவாரின்றிக் கைவிட்டனர். அதனால் இசைத் தமிழ் அழிந்ததுடன், எஞ்சியுள்ள ஒரு சில இசைத் தமிழ்ச் சூத்திரங்கட்கும் குறியீடுகட்கும் உண்மைப் பொருள் காண்டல் அரிதாய்விட்டது. இப்போது பாணரெனப்படுவார், மாடு தின்னாமையும் பிணப் பறையடியாமையும்பற்றிப் பறையரினும் சற்று உயர்வாயிருப்பினும், தம் பண்டைத் தொழிலையும் பெருமையும் இழந்தவராயே உள்ளனர்.

பண்டைக் காலத்தில் பட்டத்தியானைமேல் ஏறி அரசருடைய விளம்பரங்களைப் பறையறைந்து நகரத்தார்க்கு அறிவித்த வள்ளுவரும் பாணர் அல்லது பறையரே. சாதாரணப் பறையர் பொதுமக்கட்கும் வள்ளுவர் அரசர்க்கும் பறையறைகிறவராயிருந்தனர். இதுவே வள்ளுவரின் ஏற்றத்திற்குக் காரணம்.

இன்றும் தென்னாட்டிற் சில சிற்றூர்களில் பறையர் கோயில் மேளம் என்னும் மணப்பறை பயில்வதையும், அதை மேல்வகுப்பாரில்லங்களில் இருவகை வினைகட்கும் வாசிப்பதையும் காணலாம். இசைத் தொழில் நடத்தமுடியாத பாணரெல்லாம் குடைமுடைதல், மீன்பிடித்தல் முதலிய பிற தொழில்களை மேற்கொண்டுள்ளனர்.

ஆரியர் (பிராமணர்) முதல் முதலாய் வாய்ப்பாட்டும் நரப்புக்கருவியும் பயின்று இதுபோது தோற்கருவியும் பயில்கின்றனர். ஆயினும் 'நாதசுரம்' என்னும் துளைக்கருவியையும், 'தவல்' போன்ற தோற் கருவிகளையும் பயில்வதில்லை, அவை தாழ்ந்தவை என்று எண்ணப்படுதலான். 11-ம் நூற்றாண்டு வரை பாணரே தமிழ்நாட்டில் இசைத்தலைமை வகித்தமை, நம்பியாண்டார் நம்பியாலும் அபயகுல சோழனாலும் தில்லை

யம்பலத்திற் கண்டெடுக்கப்பட்ட தேவாரத் திருப்பதிகங்கட்கு இசை வகுக்குமாறு, திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபினளான ஒரு பெண் நியமிக்கப்பட்டமையால் விளங்கும்.

ஆரியப் பிராமணர் இசை பயிலக் கூடாதென்று ஆதியில் ஓர் விலக்கு இருந்தது. மனுதர்ம சாஸ்திரம் 4-ம் அத்தியாயம் 15-ஆம் விதியில் பிராமணர் "பாட்டுப் பாடுவது, கூத்தாடுவது...............இப்படிக்கொத்த சாஸ்திர விருத்தமான கர்மத்தினால் பொருளைத் தேடிக்கொள்ளக் கூடாது" என்று கூறப்பட்டுள்ளது.

வேதத்தை ஓதாது வரிப்பாட்டைப் பாடி, வேத ஒழுக்கத்தினின்றும் தவறியதால் சில பார்ப்பனர் விலக்கப்பட்டு ஓர் ஊருக்கு வெளியே போய்க் குடியிருந்தனர் என்னும் செய்தி, சிலப்பதிகாரத்தில் (புறஞ்சேரி. அ. 38, 39).

"வரிநவில் கொள்கை மறைநூல் வழுக்கத்துப்
புரிநூன் மார்பர் உறைபதி"

என்னும் அடிகளிற் குறிக்கப்படுகின்றது.

ஆரியர் இந்தியாவிற்கு வருமுன்னமே தமிழர்க்கு இசைத் தமிழ் இருந்தது. இசையை மொழிப் பகுதியாக்கினது தமிழிலன்றி வேறு எம்மொழியினுமில்லை. ஆரிய வேதங்களில் ஒன்றான சாம வேதம் இசையோடு கூடியதேனும், அவ்விசை பிறநாடுகளிற்போல மந்திரத்திற்குரிய அளவு சாமானியமானதேயன்றித் தமிழிசைபோல விரிவாய் ஆலாபித்துப் பாடப்படுவதன்று. தென்னாட்டுத் தமிழிசையைப் பின்பற்றியே சம்ஸ்கிருதத்தில் இசை நூல்கள் பிற்காலத்தெழுதப்பட்டன. கி. பி. 5-ம் நூற்றாண்டிலேயே முதன்முதலாய் வடமொழியில் இசை நூலெழுந்ததென்று தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் தமது கருணாமிர்த சாகரத்திற் கூறியுள்ளார். ஆகவே ஆரிய வேதத்தினின்றும் இந்திய இசை எழுந்ததென்பது அறியாதார் கூற்றே. வேத வொழுக்கத்திற்கு மாறான மேனாட்டு அறுவைமுறை மருத்துவத்தை எங்ஙனம் ஆரியர் பிற்காலத்துப் புதிதாய்க் கற்றுத் தேர்ந்தனரோ, அங்ஙனமே தமிழர் இசையையும் முற்காலத்துப் புதிதாய்க் கற்றுத் தேர்ந்தனர். வட நூல்களிற் கூறப்படாத பல தோற்கருவிகள் தமிழ் நாட்டிலிருந்தன. பல உயிர்களின் தோலையும் சவ்வையும் ஊறவைத்துக் கிழித்துப் பல்வகைப் பறை கட்டுக் கட்டுவது பாணர்க்கே ஏற்கும். இசைவல்ல ஓர் வகுப்பார் இசைக்கருவிகள் செய்பவராயுமிருத்தல் வேண்டும். இசை

நூற்கு இன்றியமையாத குறியீடுகளெல்லாம் இன்றும் தமிழி லுள்ளன.

இனி இக்காலப் பாணரைப்பற்றி, தர்ஸ்டன் (Thurston) என்பார் தமது 'தென்னாட்டுக் குலமரபுகள்' (Castes and Tribes of Southern India) என்னும் நூலில் தொகுத் திருப்பதைச் சுருக்கிக் கூறுவாம்:—

தமிழப் பாணர் மேஸ்திரியெனவும் படுவர். இவர் திரு நெல்வேலி, மதுரைக்கோட்டங்களில் தையற்காரராயுள்ளனர். இவர் வேளாளரையும் பார்ப்பாரையும் புரோகிதராகக் கொள் வர். இவர் வீட்டில் அம்பட்டரும் வண்ணாரும் உண்ணார்; ஆயினும் கோயில் நுழையும் உரிமை இவர்க்குண்டு.

மலையாளப் பாணர் மந்திரவாதிகளும் பேயாடிகளுமா யிருக்கின்றனர். இவர் மந்திர வினைகள் பல்வேறு வகைப் பட்டவை. இவருள் ஆடவர் தாழங்குடை முடைவர்; பெண்டிர் மருத்துவம் பார்ப்பர். சிலவிடத்து மலையன் என்னும் பட்டம் இவர்க்குண்டு. அறுப்புக்காலத்தில் பாணச் சிறுவர் சிறுமியர் வீடுதோறும் சென்று குடையுடன் ஆடி இரப்பர். பயிர்பச்சைமீது அதிகாரமுள்ள பேய்கள் இவர் வயப்பட்டன என்று கருதப்படுகிறது. சில சடங்குகளில் பாணர் துடி யியக்குவர். பறைக்குத் தோல் கட்டுவதும் இவர் தொழிலாம்

பாணனை குருப்பு என்னும் மேல்வகுப்பம்பட்டன், தீயருக்கும், இறந்தோர் ஆவியை அவர் இறந்த அறையினின் றும் ஒரு சடங்கால் வெளிப்படுத்துவான். இவன் செறுமர்க்கு மேற்பட்ட தீண்டாதான்; தாழங்குடைக்கு மூங்கில் வேலை மட்டும் செய்வான். தாழை வேய்வது இவன் மனைவி. தன் மனைவி யில்லாவிட்டால் அயல்வீட்டுப் பெண்டிரிடம் தாழை வேயக் கொடுப்பான்.

தீயர் பிணஞ் சுடும்போது பாணர் 5 நாள் இரவு பறை யறைந்து தீயாவிகளை விரட்டுவர்.

பாணர்க்கு மக்கள்தாயமே. பெண்டிர் பல சகோதரரை மணப்பதுண்டு. தென் மலபாரில், பாணர்க்குள் திருரெங்கன், கொடகெட்டி (குடைகட்டி), மீன்பிடி, புள்ளுவன் என நாற் பிரிவுண்டு. இவருள் புள்ளுவன் ஏனையரினும் தாழ்ந்தவன். பாணர் கலப்பு மணமுள்ள பல இல்லங்கள் அல்லது கிரியங்க ளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். காளி, பரகுட்டி, கரிங் குட்டி, குளிகன், குட்டிச்சாத்தான் என்பன இவர் தெய்வங்கள். இவர் உச்ச வேலி என்னும் வகுப்புப் பேய்களை ஓட்டுவர்.

ஒரு பாணன் தன் ஆடையில் ஓர் இழையெடுத்துத் தன் மைத்துனனிடம் கொடுத்து உன் பரிசம் முடிந்தது என்று கூறினால் தன் மனைவியை முற்றும் தள்ளியதாகும்.

மலையாளப் பாணருள், அஞ்ஞூற்றுன், முந்நூற்றுன் என இரு உட்பிரிவுகளுண்டு. திருவாங்கூர்ப் பாணர்க்குப் பணிக்கப் பட்டமுண்டு. இவர் தமிழப் பாணரினுந் தாழ்ந்தவர். இவர் மேற்குலத்தார்க்கு 36 அடித் தூரம் விலகுவர்; மன்னுரையும் வேடரையும் 8 அடித்தூரத்தும் புலையரையும் பறையரையும் 32 அடித்தூரத்தும் தம்மினின்றும் விலக்குவர். இவர் மயிர்வினையும் சலவையும் தாமே செய்து கொள்வர்; கம்மாளரிடத்துண்பர்; இளமை மணஞ் செய்வர்; இறந்தோரைப் புதைப்பார். இவர்க்குச் சாவுத் தீட்டு 16 நாள். இயல்பாய் இறந்தவர்க்கு ஆடி மாதத்திலும், கொலையுண்டு அல்லது துன்ப நேர்ச்சியில் இறந்தவர்க்கு ஆவணி மாதத்திலும் ஊனுங் கள்ளும் படைப்பர். இது வெள்ளங்குளி யெனப்படும். இறந்தவரை நினைவுகூரப் பந்தல் மடம் முதலியன அமைப்பதுண்டு.

ஈழவர் தமது கொண்டாட்டங்களில், பாணர்க்கு ஈராள் உண்டியளித்துத் தம் முன்னோர்க்கு அவர் முன்னோர் செய்த ஓர் நன்றியை நினைவு கூர்வர்.

பாலக்காட்டில் பாணர் தலைவனுக்குக் கப்ரதன் என்று பெயர். அவன் இறந்தால் அரசனுக்கு அறிவிக்கப்படும். அரசன் வாள், கேடகம், ஈட்டி, துப்பாக்கி, வெடிமருந்து, வெள்ளிக் காப்பு, அட்டிகை என்னுமிவற்றை அவன் மகனுக்காவது இழவு கொண்டாடுபவனுக்காவது அனுப்புவன். மகன் அணிகளையும், வேறு சிலர் ஆயுதங்களையும் அணிந்து கொள்வர். பிணத்தை எடுக்கும்போது ஒன்றும், கிடத்தும் போது ஒன்றும், எரித்தபின் ஒன்றுமாக 3 வெடி சுடுவர். மறுநாள் மகன் தன் கையாற் செய்த ஓர் தாழங்குடையை அரசனுக்களிப்பன். அரசன் அவனுக்குக் கப்ரதன் என்னும் பட்டமளிப்பன்.

சங்கிலிக்கருப்பன், பேச்சி, ஊதர கருப்பன், காளி, சோதல கருப்பன், சோதல பத்ரகாளி, யட்சி, கந்தர்வன், அனுமான் என்று ஆவிகளைப் பாணர் வயப்படுத்துவர்.

பாணர் மதம் பேய் வணக்கம். மூக்கன், சாத்தன், கப்பிரி, மலங்கொறத்தி (குறத்தி) என்னுந் தெய்வங்களையும் இவர் வணங்குவர். இத்தெய்வங்களுக்கு மரத்தடியில் கல் நட்டு,

முழுக்காட்டி, ஆடு கோழியறுத்துக் காய்கறி சோறு படைப்பர்; இறந்தோரையும் வணங்குவர்; அமாவாசையன்றாவது முழு நிலாவின் பின் 11-ம் நாளாவது நோன்பிருப்பர்.

பாணர் எல்லாரும் பார்ப்பார், நாயர், கம்மாளர், ஈழவரிடம் உண்பர். பாணரும் கணியரும் தொட்டுக்கொண்டால் ஒருவரையொருவர் தீட்டுப்படுத்தியவராவர்; பின்பு குளித்துத் தீட்டைப் போக்குவர். பாணர் ஈழவர் அருகில் குடியிருக்கலாம்; ஆனால் நாயர் தரையில் குடியிருக்க முடியாது. கம்மாளர் கிணற்றில் தண்ணீரெடுக்கவும், பார்ப்பனர் கோயிலின் புறமதிலையண்டவும், பாலக்காட்டில் பார்ப்பனர் தெருவழிச் செல்லவும் இவர்க்கு உரிமையில்லை. 1891-ம் ஆண்டுக் குடிமதிப்பில், பாணர் பறையருள் ஒரு பிரிவார் என்று குறிக்கப்பட்டுள்ளது.

மாங்கனி

முற்றிப்பழுத்த மாம்பழம் நறுமண மிகுந்தது; இன்சுவையது; கொழுமையுள்ளது; உடலை வளர்க்கும் ஆற்றல் வாய்ந்தது; நெஞ்சுக்கு உரமளிப்பது; உண்டவற்றைச் செரிக்கச்செய்து பசியை மிகுப்பது; பித்தத்தையகற்றுவது; குருதியைத் துப்புரவாக்குவது; கிளர்ச்சியை அளிப்பது; ஊக்கத்தைக்கொடுத்து உடல் வனப்பையும் மிகுப்பது. இது நம்நாட்டார் மருத்துவ முறையில் ஆய்ந்து கண்ட முடிபு.

மேனாட்டுக் கனிவகைகளுள் உடல் வளர்க்கும் ஆற்றல் வாய்ந்தது "ஆப்பிள்" என்னும் பேரிலந்தை யொன்றே. நாடோறும் ஓர் "ஆப்பிள்" அருந்தின் நாடவேண்டாம் எம்மருத்துவரையும் என்று ஆங்கிலப் பழமொழியுமுண்டென்பர். இத்தகைய "ஆப்பிள்" கனியினும் ஆறுமடங்கு மிகுந்த "சி" வைடமின் என்னும் உயிர்ச்சத்துள்ளது மாங்கனி யென்றும், "ஏ" வைடமினும், "ஜி" வைடமினுங்கூட அதன்கண் மிகுந்து காணப்படுகின்றன என்றும், வெண்ணெயிலுள்ள உயிர்சசத்து மாங்கனியிலுமுள்ளது என்றும் ஆங்கில மருத்துவர் இப்பொழுது ஆராய்ந்து கூறுகின்றனர்.

—(விநோதன்.)

பரிபாடல் கச

செவ்வேள்

கார்மலி கதழ்பெய றலைஇ யேற்ற
நீர்மலி நிறைசுனை பூமலர்ந் தனவே
தண்ணறுங் கடம்பின் கமழ்தா தூதும்
வண்ண வண் டிமிர்குரல் பண்ணை போன் றனவே
அடியுறை மகளி ராடுந் தோளே
நெடுவரை யடுக்கத்து வேய்போன் றனவே
வாகை யொண்பூப் புரையு முச்சிய
தோகை யார்குரன் மணந்து தணந்தோரை
நீடன்மின், வாரு மென்பவர் சொற்போன் றனவே
நாண்மலர்க் கொன்றையும் பொலந்தார் போன்றன
மெல்லிணர் வேங்கை வியலறைத் தாயின
அழுகை மகளிர்க் குழுவை செப்ப
நீரயற் கலித்த நெரிமுகைக் காந்தள்
வார்குலை யவிழ்ந்த வள்ளிதழ் நிரைதொறும்
விடுகொடிப் பிறந்த மென்றகைத் தோன்றிப்
பவழத் தன்ன செம்பூத் தாஅய்க்
கார்மலிந் தன்றுநின் குன்று போர்மலிந்து
சூர்மருங் கறுத்த சுடர்ப்படை யோயே
கறையில் கார்மழை பொங்கி யன்ன
நறையி னறும்புகை நனியமர்ந் தோயே
அறுமுகத் தாறிரு தோளால் வென்றி
நறுமலர் வள்ளிப் பூநயந் தோயே
கெழீஇக் கேளிர் சுற்ற நின்னை
எழீஇப் பாடும் பாட்டமர்ந் தோயே
பிறந்த ஞான்றே நின்னை யுட்கிச்
சிறந்தோ ரஞ்சிய சீருடை யோயே
இருபிறப் பிருபெய ரீர நெஞ்சத்
தொருபெய ரந்தண ரறனமர்ந் தோயே
அன்னை யாகலி னமர்ந்தியா நின்னைத்
துன்னித் துன்னி வழிபடு வதன்பயம்
இன்னு மின்னுமவை யாகுக
தொன்முதிர் மரபினின் புகழினும் பலவே

என்பது பருவங் கண்டு அழிந்த தலைமகள் கேட்ப முருக வேளைப் பரவுவாளாய், இப்பருவத்தே தலைமகன் வருமென்பது படத் தோழி வற்புறுத்தியது.

ODE TO MURUKA.

(Translated from PARIPADAL, an ancient Tamil Anthology)

[S. NATESAN, B.A. B.L., F.R.E.S., Member of the State Council of Ceylon.]

The lilies of the mountain pools filled to the brim by the heavy showers of the dark clouds have blossomed.

The humming of the pretty-hued bees that tune round the pollen of the cool, fragrant Kadamba flowers is like a Pan* ditty.

The shoulders of the damsels that dance on the foot of the hills are like the bamboos on the sides of the high mountain range.

The call of the peacocks with crests like the lustrous Vahai flowers is like the words of lovers to their absent lords, Delay not yet, but come!

The Konrais in bloom are like golden garlands.

The soft-petalled Vengai flowers are lying about on the ground, mothers pointing to them as tigers to fright their crying children.

Where the luxuriant clusters of the thick Kanthal buds lie with their broad petals opened, the tender creeper Thonri strews its coral-red flowers.

Thus have the rain-clouds overspread thy Hill, O Holder of the resplendent lance that in battle cut the Titan in twain!

Thou lovest the sweet-smelling smoke of the incense that rises like white monsoon clouds.

Six-faced and twelve-shouldered Hero that desired the beautiful, redolent Valli!

Thou art pleased with the songs sung to the air of the lyre in praise of Thee, by ladies who pray that their beloved lords may ever be with them.

O Puissant One whom on the very day of Thy birth five Devas feared!

Born twice, named twice, Thou of gracious heart dwellest in the Law of the peerless sages.

Thus art Thou, and we worship Thee again and again, and may the fruit of it be the increase of that worship transcending Thy praises of yore!

---

* The generic name for Tamil airs.

நறுவீ முல்லை

முதனூலாவது வரம்பிலறிவன் பயந்தது.

*　　*　　*

முதனூலோடு ஒத்த மரபிற்றாய் ஆசிரிய மதவிகற்பம் படக் கிளப்பது வழிநூல்.

*　　*　　*

முதனூல் வழிநூல் என்ற இருநூலுள்ளும் ஒருவழி முடிந்த பொருளை ஒருபகார நோக்கி ஒரு கோவைப்பட வைப்பது சார்புநூல்.

*　　*　　*

எதிர்நூல் என்பதும் ஒன்றுண்டு. அது யாதோவெனின், முதனூலின் முடிந்த பொருளை ஒருவன் யாதானும் ஒரு காரணத்தாற் பிறழவைத்தால் அதனைக் கருவியால் திரிவுகாட்டி ஒருவாமை வைத்தற்கு ஒள்ளியான் ஒரு புலவனால் உரைக்கப்படுவது.

*　　*　　*

நூலெனப்படுவது நுதலிய பொருளை முதலிற்கூறி முதல் நடு இறுதி மாறுகோள் இன்றித் தொகைவகை விரிபடப் பொருள் வைத்துப் பொழிப்பு அகலம் நுட்பம் நூலெச்சம் என்னும் உரையிற் பொருள் விளங்கு நுண்மைக்கு வரம்பாக நோக்குடையது.

*　　*　　*

நூல் போறலின் நூலென்ப ; பாவைபோல்வாளைப் பாவை யென்றாற்போல.

*　　*　　*

நுண்ணிய பலவாய பஞ்சுநுனிகளாற் கைவன் மகடூஉத் தனது செய்கை மாண்பினால் ஓரிழைப் படுத்தலாம் உலகத்து நூனூற்ற லென்பது.

*　　*　　*

சுரந்து பரந்த சொற் பாவைகளாற் பெரும்புலவன் தனது உணர்வுமாட்சியிற் பிண்டம் படலம் ஒத்துச் சூத்திரமென்னும் யாப்பு நடைபடக் கோத்தலா முலகத்து நூல் செய்தலாவது.

*　　*　　*

அதிகாரம் நுதலியதெல்லாம் அதிகாரத்துள் ஓத்து நுதலா வன்றே, பல ஓத்துக்கொண்டது ஓர் அதிகாரமாதலின்.

*　　*　　*

கண்ணழித்தல் என்பது பதப்பொருள் சொல்லுதல்.

—இறையனார்,

கடவுளதாணையான் உலகமும் அதற்குறுதியாகிய அறம் பொருளின்பங்களும் நடத்தற் கேதுவாவது மழை.

*　　*　　*

மழைக்கு முதலாய கடற்கும் மழை வேண்டும்.

*　　*　　*

தானமாவது: அறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடுங் கொடுத்தல்.

*　　*　　*

தவமாவது: மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கல் முதலாயின.

*　　*　　*

துறத்தலாவது: தத்தம் வருணத்திற்கும் நிலைக்கு முரிய ஒழுக்கங்களை வழுவாதொழுக அறம்வளரும்; அறம்வளரப் பாவந்தேயும்; பாவந்தேய அறியாமை நீங்கும், அறியாமை நீங்க நித்த வநித்தங்களது வேறுபாட்டுணர்வும் அழிதன் மாலையவாய இம்மை மறுமை இன்பங்களினுவர்ப்பும் பிறவித் துன்பங்களுந் தோன்றும்; அவை தோன்ற வீட்டின்க ணாசையுண்டாம்; அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனின் முயற்சிகளெல்லாம் நீங்கி வீட்டிற்குக் காரணமாகிய யோகமுயற்சி யுண்டாம்; அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றாகிய எனதென்பதும், அகப்பற்றாகிய யானென்பதும் விடும். ஆதலான் இவ்விரண்டு பற்றையும் இம்முறையே யுவர்த்து விடுதலெனக் கொள்க.

*　　*　　*

நிறைமொழி யென்பது அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி.

*　　*　　*

குற்றங்களைந்தாவன அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பென்பன; இவற்றை வடநூலார் பஞ்சக்கிலேச மென்பர்.

*　　*　　*

பிதிரராவார் படைப்புக் காலத்து அயனாற் படைக்கப்பட்டதொரு கடவுட் சாதி.

*　　*　　*

விருந்தென்பது புதுமை; அவர் இருவகையர், பண்டறிவுண்மையிற் குறித்துவந்தாரும், அஃதின்மையிற் குறியாது வந்தாருமென.

*　　*　　*

இல்லாட்கும் கணவற்கும் நெஞ்சொன்றாகாவழி இல்லறங் கடைபோகாது.

—பரிமேலழகர்.

“சைவசமயம்” என்பது ‘சிவத்தை ஆராய்ந்து அறிந்த பொழுது அல்லது கொள்கை’ என்று பொருள்படும்.

உலகத்திலே அளவிறந்த கொள்கைகள் இருந்தாலும், அவை யெல்லாவற்றுள்ளுங் கடவுளைப் பற்றிய கொள்கையே சமயம் என்று பெரும்பான்மையும் எவராலுங் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது.

* * *

ஒன்றோடொன்று மாறுபட்ட கொள்கைகள் உடையவர்களெல்லாருங் கடைசியாகக் கைக்கொண்டது 'தமக்கு மேற்பட்ட ஒரு பேரறிவுப் பொருள் வணக்கமே' ஆகும்.

* * *

மக்கள் மட்டுமே யல்லர், மக்களினுந்தாழ்ந்த எல்லா உயிர்களுங் கூடத் தமது துன்பத்தைப்போக்கி இன்பத்தை ஆக்கிக்கொள்ளவே முயன்று நிற்கின்றன.

* * *

சீவகாருணிய ஒழுக்கம் மற்றைச் சமயத்தவராலுங் கைக்கொள்ளப்படினும் அது சைவசமயிகளுக்கே பழமைக் காலந் தொட்டுச் சிறந்த உரிமையாகி வருகின்றது.

* * *

தமிழ்மொழியின் அமைப்பும் அதன் இயற்கையுஞ் சைவசமய உண்மையொடு மிகவும் ஒன்றுபட்டிருக்கின்றன.

* * *

தமிழ் அல்லாத மற்ற மொழிகளில் வருத்தப்பட்டுச் சொல்லுஞ் சொற்களுஞ், சினந் துன்பம் வந்தாற் பிறக்கும் உரத்த ஓசைகளும், இளைத்த ஒலிகளும் நிரம்பிக் கிடத்தலால் அவை யெல்லாஞ் செயற்கை மொழிகள்.

* * *

தமிழில் வருத்தமின்றி இயல்பாற் பிறக்குஞ் சொற்களே நிறைந்து சினத்தாற் பிறக்கும் வெடுவெடுப் போசையுந் துன்பத்தாற் பிறக்கும் இளைப்பொலியும் இன்றி, எல்லாம் இனிய குணத்திற் பிறக்கும் மெல்லோசைகளாய் இருத்தலின் தமிழ் இன்பவடிவாய் விளங்குஞ் சிவத்தோடு ஒத்த இன்பம்வாய்ந்த தெய்வ மொழியாம்.

* * *

சிவபிரான் கோயில்களில் நிறுத்தப்பட்டிருக்குந் திருவுருவங்கள் இறைவனுக்கு என்றும் உரிய அருளுருவத்தையும் அன்பர்க்கு அருள் செய்யும் பொருட்டு முதல்வன் ஒரோருகாற்கொண்ட திருவுருவத் தோற்றங்களையும் அன்பர்க்கு நினைவில் எழுப்புதற் பொருட்டு அமைத்த வடிவங்களே யாகும்.

* * *

இறைவனருளைப் பெறுதற்கு மெய்யுணர்வும் அதன் வழித்தோன்றும் பேரன்புமே வாயில்கள்.

—மறைமலை அடிகள்.

விருந்தோம்பல்

[திரு. ஜீ. சுந்தரமய்யர் அவர்கள்]

பசித்து வந்தவருக்கு இயன்றவளவு அன்னமிடுதல் நம் நாட்டின் சிறப்பான பண்டைய வழக்கம். விருந்தோம்பலும் இல்லற ஒழுக்கத்தைச் சார்ந்த ஒரு தனி நன்னெறியாகும்.

விருந்து என்றால் புதியவர்க்கமைக்கும் உணவு; புதுமை என்பது பொருள். ஆகு பெயராய் விருந்தினரைக் குறிக்கும். விருந்தாளி, விருந்தினர் என்றால் புதியவன், புதியவர், என்பது பொருள். புதியவர் இருவகை யாவர், நமக்கு முன் அறிமுகமானவர் (இவர்கள் நண்பர் வகுப்பில் சேர்ந்தவர்), நமக்குத் தெரியாதவர்கள. நண்பர்களும் இவர்களும் குடும்பத்தைச் சேராதவர்களாதலால் புதியவர் ஆவர். சில காலங்களில் நம் வீட்டிற்குச் சிலரை உண்ண அழைக்கிறோம். அவர்கள் விருந்தாளிகளேயாவர். அழைக்கப்படாமலும் எதிர் பாராமலும் சில காலங்களில் நம் இல்லத்திற்குப் புதியவர் வருவதுண்டு. அவர்கள் அதிதி எனப்படுவர். இல்லறத்தி லிருப்போன் கடமைகளிற் சிறந்தன அதிதி பூசை செய்தலும் விருந்தோம்பலுமாகும். "வேளாளனென்பான் விருந்திருக்க உண்ணுதான்" என்ற நன்மொழியைக் கருத்தில் வைக்க.

இல்வாழ்வானுக்குப் பத்துக் கடமைகளை விதித்த வள்ளுவனார் தம் கருத்தை இருவகையாகக் கூறியிருக்கிறார். இல்வாழ்வான் சிலருக்குத் துணைசெயல்வேண்டுமென்றும் சில அறநெறிகளை வழுவாமல் ஓம்பல் வேண்டுமென்றும் "இல்வாழ்க்கை" என்னும் அதிகாரத்தில் அமைத்திருக்கிறார். ஆகவே "ஐம்புலத்தா றோம்ப றலை" என்று முடியும் குறள் இவ்வதிகாரத்திற்குத் தொடர்புடையதாகும். ஐவகை அறத்தை ஓம்பல் தலை. அவற்றில் சிறந்தது விருந்தோம்பல். "நடுவணது எய்த இரு தலையும் எய்தும்" என்பது பழமொழி. ஐவகை அறநெறியில் நடுவண் கூறப்பட்ட விருந்தே சிறப்பாதல் பற்றி இதற்குத் தனி அதிகாரம் வைத்தது முறையாகும். அன்பு சிறந்தோங்கி வளர்வதற்கு அறம் ஒருபடியாதலாலும், புதியவனைப் பேணிக் காப்பவன் மற்றெல்லோ

ரையும் உபசரித்துத் துணையா நிற்பாளுதலாலும் அதிகார ஒழுங்கு பொருத்தமா யிருக்கிறது.

விருந்தைப் பற்றி முந்திய அதிகாரத்தில் சொல்லியிருப் பினும் இப்பகுதியில் ஓம்பும் முறையும் அதன் பயனும் விவரிக்கப்பட்டிருப்பதால் கூறியது கூறல் என்னும் குற்றம் ஆகாது.

“ஓம்பல்” என்பது புரம்தருதல் (to afford shelter or to show hospitality) பாதுகாத்தல் என்னும் பொருளில் அமைந் திருப்பதோடு அறநெறிவழுவாது செய்யும் அறமே சிறப் புடையதாதலால் பேணுதல், முகமலர்ந்து உபசரித்தல், இனிய மொழிகூறல், அன்புடன் அன்னமிடுதல், பரிவுடன் காத்திருத் தல் முதலிய நற்குணப் பான்மைகளையும் சுட்டும். விதுரன் வீட்டில் கண்ணன் பழமுண்ட வரலாற்றையும் குசேலன் அவருக்கே உதவிய அவல் அமுது வரலாற்றையும் கருத்தில் வைத்துக் கொண்டால் இட்ட உணவு சிறியதாலும் அன்புப் பெருக்கோடு இட்டதனுல் மிகச் சிறந்த விருந்தாகிறது. என்பது புலப்படும். ஆதலால் ஓம்பும் முறையை யாவரும் கருதுதல் வேண்டும்.

பருதியார் பாடம்

பரிமேலழகர் பாடவரிசையை 1, 6, 3, 4, 5, 8, 7, 2, 9, 10 ஆய் மாற்றிக் கொண்டால் பருதியார் பாடவரிசையாகும். பருதியார் பாடமும் குறிக்கப்பட்டிருக்கிறது. முதல் குறளுக் குப் பதவுரையும் குறிக்கப்பட்டிருக்கிறது.

முதலிரண்டு குறள்களினுல் விருந்தோம்பல் ஏன் செய்ய வேண்டுமென்றும், 3, 4, 5 இவைகளினுல் வேள்வியின் இம்மைப்பயனும், 6-வது குறளினுல் விருந்தோம்பாமை பாவம் என்றும், (வேதம் உரைத்தது செய்யாமை பாவ மாகும்.) 7-வது குறளால் வேள்வியின் பயனளவு கூறவொண் ணுதென்றும், 8-வது குறளால் இந்நோன்புடையான் உலகிற் குச் சிறந்த உதாரணமானவனென்றும், 9-வது குறளால் விருந் தோம்பாதிருத்தல் முழுமடமையென்றும், 10-வது குறளால் விருந்தினரின் பொது இயல்பு இத்தன்மைத்தென்றுங் காட்டி யிருக்கிறார். விருந்தோம்பும் முறையும் பல குறளிலும் அமைந்திருக்கிறது.

I ஓம்பல் ஏன்!

(1) இக்குறள் இவ்வதிகாரத்தில் மிகவும் முக்கியமானது. இதிலுள்ள பொருள்களெல்லாம் உட்கொண்டுமணக்குடவரும்

பரிமேலழகரும் உரை யெழுதியிருப்பதாகத் தோன்றவில்லை. பருதியார் உரையில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

பதவுரை

இல் இருந்து—இல்லறத்தின்கண் இருந்து,

ஓம்பி—தாய், தந்தை, மனைவி, மக்கள் முதலியவர்களையும் இடம், பொருள், ஏவல் முதலியவைகளையும் பாதுகாத்து,

வாழ்வதெல்லாம்—சிறப்பாக வாழ்வதெல்லாம் எதற்காக என்றால்;

விருந்தோம்பி—தன்னை யொழித்து இல்வாழ்க்கையில் கூறியபடி பதின்மரையும் பாதுகாத்து,

வேளாண்மை செய்தற் பொருட்டு—நல்வினையைச் செய்து அருள்பெற்றுப் பேரின்பம் அடையும் பொருட்டு என்க.

பரிமேலழகரும், மணக்குடவரும் "வேளாண்மை" என்னும் சொல்லைக் கருதவேயில்லை என்று தோன்றுகிறது. மேலும் பரிமேலழகர் "மனைவியோடும் வனத்திற்செல்லாது", என நூதனமானதும் பொருந்தாதுமான ஒரு கருத்தை உட்புகுத்தியிருக்கிறார். துறவிகள் வனத்திற்குச் சென்றே தீர வேண்டும் என்ற கட்டாய விதியை வள்ளுவனார் சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை. மேலும் இருவரும் பொருளைப் போற்றி (அதாவது பணத்தைப் போற்றி)வாழும் வாழ்க்கை யெல்லாம் (செய்கையெல்லாம்) என்று உரை செய்திருப்பது சிறப்பாயில்லை. இருவருக்கும் இல்வாழ்வது இல்லறம் ஒழுங்காக நடத்துதற்கே என்றதை மறந்தார் போலும் என்று தோன்றுகிறது.

விருந்தோம்பலை வேளாண்மையாக உருவகப்படுத்தப்பட்டிருக்கிறது. வேளாண்மை என்பது பயிரிடும் தொழில்; உழுது, நீர் பாய்ச்சி, பயிரிட்டு, வளர்த்து, களைவெட்டி அப் பயிரின் பயனைப் பெறுவதாம். விருந்தோம்பி வேளாண்மை செய்தலாவது விருந்தோம்பல் முதலிய பதின்மரைப் பாதுகாத்தலாகிய உழவைச் செய்து ஆர்வ நீரைப் பாய்ச்சி அன்பாகிய நல்வினைப் பயிர் செய்து, நட்பாகிய மலர் மலரும்படி செய்து, தீவினையை ஒதுக்கி அருளாகிய காய் காய்க்கப் பேரின்பமாகிய கனியை அருந்துவதாம். அச்சிடப்பட்ட புத்தக உரையாசிரியர்கள் "விருந்தோம்பி செய்தற் பொருட்டு" என்று வள்ளுவனார் மொழிந்ததாக வைத்துக்கொண்டு பொருள் எழுதியிருக்கிறார்கள்.

திராவிட மொழிகள்

[காழி. சிவ. கண்ணுசாமி, பி. ஏ.]

தமிழ்

தமிழ்மொழி தென்னிந்தியா வெங்கணும் பரவியுள்ளது. அதனை 'அரவ'மென்று மழைப்பர். மேற்கே மைசூர், மேற்குத் தொடர்ச்சி மலைகள்வரை அம்மொழி பயின்று வருகின்றது. வடக்கே சென்னைப்பட்டினம் முடியவும் அதற்குச் சற்று அப்பாலும் அது பயின்று வருகின்றது. ஈழமென்னும் இலங்கையின் வடபகுதியிலும் தமிழ் மொழியே நாட்டு மொழியாக இருந்து வருகின்றது. 1901-ஆம் ஆண்டு எடுத்த கணக்குப்படி அப்பகுதியிலிருந்த தமிழரின் தொகை 953,535. தமிழ் நாட்டிலிருந்து சென்றுள்ள தொழிலாளர்கள் கூலி வேலைக்காரர்கள் மூலம் ஈழத்தைக் கடந்தும் பல பகுதிகளில் தமிழ்மொழி பயின்று வருகின்றது. இன்னுங் கூறப்புகின், வீட்டு வேலை செய்யும் வேலைக்காரர்கள் மூலம் தமிழ்மொழி இந்தியாவெங்கணுமே பேசப்பட்டு வருவதைக் காணலாம். திராவிட மொழிகளுள் தமிழ் மொழியே மிகமிகத் தொன்மை வாய்ந்ததும், பெருவளம் பொருந்தியதும், மிகவுஞ் சீர்திருந்தியது மான உயர்தனிச் செம்மொழியாகும்; சொல்வள மிகுந்தது; அளவிட வொண்ணுப் பண்டைக் காலமுதற் பயின்று வருவது. வகையும், தொகையும் தனியுமாகக் கணக்கற்ற இலக்கியங்கள் இம்மொழியில் இலங்குகின்றன. ஆனல், பெரும்பாலும் அவை யெல்லாம் மிகவுந்திருந்திய செந்தமிழ் நடையானியன்றவை; வழக்காற்றிற் பேசப்பட்டு வரும் கொடுந்தமிழ் நடையானியன்றனவல்ல.

மலையாளம்

மலையாளம் என்பது தமிழிலிருந்து கி. பி. 9-ஆம் நூற்றாண்டிற் கிளைத்துப் பிறந்த புது மொழியாகும். மேற்குக் கடற்கரையிலுள்ள மலையாள நாட்டிற் பயின்று வருவது இம்மொழியே. எழுத்து வழக்கில்லாத ஏரவம் என்ற ஒரு மொழி இம்மலையாளத்திலிருந்து கிளைத்துக் குடகு நாட்டின் ஒரு பகுதியில் இன்றும் பேசப்பட்டு வருகின்றது. மலையாள மொழியில் இக்காலத்திற் பெருவாரியாக வடசொற்கள் கலந்து விட்டன; பால் விகுதிகளைப் பயன்படுத்திவரும் முறையை மலையாள மொழி ஏறக்குறையப் புறக்கணித்து விட்டதென்றே சொல்லலாம். இம்மொழியிலும் நூல்கள் எண்ணிறந்தன எழுதப்பட்டுள்ளன. தென்னிந்தியாவிற் பண்டு வடமொழியை எழுதக் கற்பித்துக்கொண்ட கிரந்த எழுத்துக்களையே மலையாளமொழி கையாண்டு வருகிறது.

கன்னடம்

மைசூரிலும் அதனை யடுத்த மலைப் பகுதிகளிலும் பம்பாய் மண்டிலத் தென்மலைப் பகுதியிலும் கன்னடமொழி பேசப் பட்டு வருகிறது. பண்டைப் பெருநூல் வளம் அதற்குமுண்டு. அந் நூல்கள் தெலுங்கு எழுத்துக்களுக்கு நெருங்கிய தொடர்புடைய ஒருவகை எழுத்துக்களால் இயன்றவை. **வடகு, குறும்பு** என்ற எழுத்துவழக்கில்லா இருமொழிகள் இக் கன்னடத்திலிருந்து கிளைத்துள்ளன. இவ்விரண்டும் நீலகிரிப் பகுதிகளில் பேசப்பட்டு வருகின்றன. குடகு நாட்டிற் பயின்றுவரும் **குடகு** மொழியும் இதன் கிளைமொழியென்று கூறுவாருமுளர். **துளுவ** மொழி பயிலும் தென் கன்னடக் கோட்டத்திற்கும், மைசூர் பகுதிகளுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் இக்குடகுமொழி பயின்று வருகிறது.

தோதவம், கோட்டா என்ற இரு திருத்தமில்லா மொழிகள் நீலகிரியைச் சேர்ந்த பகுதிகளிற் பேசப்பட்டு வருகின்றன. இவை சொற்றொகுதிகள் என்று சொல்லுந் தரத்தனவே யன்றி மொழிகள் எனக் குறிப்பிடற் கேற்றவை யாகா.

குறுக்கம் அல்லது *ஓராவோன்

சோட்டா நாகபுரியிலுள்ள திராவிட மக்கள் பேசுவது ஓராவோன் என்று அழைக்கப்படும் குறுக்க மொழியே. அது சோட்டா நாகபுரியை யடுத்துள்ள மத்திய மண்டிலப் பகுதிகளிலும் பயின்று வருகின்றது. தொன்மைசான்ற தமிழ்மொழியுடனும் பழைய கன்னட மொழியுடனும் அதற்குத் தொடர்பிருக்கிறதாகக் கூறலாம். இவ்விரண்டையுந் தவிர்ந்து, திராவிட மொழியினத்தைச் சார்ந்த வேறெம் மொழியுடனும் அதற்குத் தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை. அம்மொழி பேசும் மக்களே தாங்களும் **மாலர்** என்ற இனத்தாரும் கன்னட நாட்டிலிருந்து வந்து அங்குக் குடியேறியதாக இன்றுஞ் சொல்லிக் கொள்கின்றனர். மாலர்கள் பேசுவது மால்டோ என்ற மொழியாகும்.

மால்டோ

ஓராவோனினத்தைச் சேர்ந்த இவர்கள் இக்காலை கங்கை யாற்றின் கரையிலுள்ள இராஜமகாலருகில் அதன் வட பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். ஓராவோன், மால்டோ ஆகிய இரண்டு மொழிகட்குமே எழுத்து வடிவோ, இலக்கியமோ கிடையா.

* ஆழ்ந்து நோக்கின் ஓராவோன் அல்லது உராவோன் என்பது தமிழ்மொழிக்கு ஒரு பெயராய அரவம் என்பதன் திரிபேபோலும்; **அரவம், உரவம், உரவன், உராவன்** என்றின்னணம் கொள்க.

மத்திய இந்தியாவிலுள்ள மலைநாடுகளிற் கோண்டு மொழி பயின்று வருகின்றது. எனினும் அம்மக்களிற் பெரும் பாலோர் ஆரிய மொழியைப் பின்னர் பயின்று அதனையே பேச்சு வழக்கிற் பெரிதுங் கையாண்டு வருகின்றனர். எனவே கோண்டு மொழியென்பதை உண்மையாகக் கூறுமிடத்துத் திராவிட மொழிக்கும் ஆரிய மொழிக்கும் இடைப்பட்டதொரு கலப்பு மொழியாகவே கூறுதல் வேண்டும். இதன்வழிக் கிளைத்தனவாக எண்ணிறந்த மொழிகளுள ; எனினும் அவை யொன்றிற்கேனும் எழுத்து வடிவோ இலக்கணமோ கிடையா.

கோண்டு

தெலுங்கு மொழியே ஆந்திர மொழியினத்தின் தலை சிறந்த மொழியாகும். சென்னை தொடங்கி ஒரிஸ்ஸா வரையிலுள்ள சென்னை மண்டிலத்தின் கிழைப் பகுதி எங்கணும் தெலுங்கு மொழியே பேச்சு வழக்கிலிருந்து வருகின்றது. நிசாம் நாட்டிலும் மத்திய மண்டிலத் தென்கோடியிலும் பீரார் பகுதியிலும் இஃது ஒருவாறு பயின்று வருகின்றது. பரந்த இலக்கியவளம் படைத்ததொரு பெருமொழி. தேவ நாகரியையொத்த தனிப்பட்ட வரிவடிவில் இஃது எழுதப் பட்டு வருகின்றது.

தெலுங்கு

ஒரிஸ்ஸா மலைகளிலுள்ள **காண்டுகள்** பேசுவது காண்டு மொழி. இது திருந்தியதொரு மொழியன்று. இதற்குக் **கோலாமி** என்றதொரு திருந்தாத கிளை மொழியுமுண்டு. இக்கிளைமொழி பீரார் நாட்டு எல்லைப் பகுதிகளில் ஒரு சிலராற் பேசப்பட்டு வருகிறது.

காண்டு

வராகி ஒரு திருந்தா மொழி. பலுச்சி ஸ்தானத்தின் நடுவிலுள்ள மலைப்பகுதிகளில் இது பேசப்பட்டு வருகின்றது. இவ்வாறு நெடுந்தொலைவில் தனித்த நிலையில் வந்து தங்க நேர்ந்தமையால் இஃது ஒருவாறு தடைப்பட்ட தனி வளர்ச்சியை யடைந்துள்ளது. இம்மொழி பேசும் மக்கள் இக்காலத்தில் திராவிட மக்கட்குரிய குழூஉக் குறிகள் ஏதொன்றையுங் கொண்டுள்ளவர்களாக வெளிபபடையாகக் காணப் படுகின்றிலர் ; எனினும் இவர்கள திராவிட மக்களினத்தைச் சேர்ந்தவர்களே என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. கலப் பியல்பற்ற பண்டைத் திராவிடர்களாகக் கணக்கிடற்குரியோரில் வராகி மொழி பேசும் இவ்வினத்தாரையே தலைசிறந்தவர்களாகக் கொள்ளுதல் வேண்டும் என்பது மொழி யாராய்ச்சியாளர்தந் தேர்ந்த முடிபாகும்.

வராகி



[காழிக்கண்ணன்]

முன்னுரை

நானா! என்னை யாரென்று கேட்கிறீர்கள்! நான் ஒரு எளிய காளைதான். துள்ளுகாளை என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்; அதைப் பற்றி அக்கறை இல்லை. மாட்டுத்தொழுவத்தில் நீங்கள் நாடோறும் பார்க்கும் ஆனினத்தைச் சேர்ந்த காளையே நான் என்பது என்னவோ உண்மைதான். ஏன், எவ்வாறு, நான் காளையாக இவ்வுலகத்தில் தோன்றினேன் என்பது எனக்குத் தெரியாது. என் தாயார், என் தந்தையார், நான் எங்கே பிறந்தேன் என்றெல்லாம் என்னைக் கேட்டுப் பலனில்லை. அவைகட்கு விடை எனக்குத் தெரியாது என்றுதான் கூறுவேன். என்னுடைய கன்றுப் பருவத்தில் நான் எங்கு வளர்ந்தேன், எவ்வாறு விளையாடினேன் என்பனபோன்ற யாதொன்றும் என் நினைவிற்கு வரவில்லை.

ஆனால், கனாக்கண்டது போன்று ஒரே ஒரு செய்தி மட்டும் என் நினைவிலிருக்கிறது. என்னுடைய வீட்டுக்காரர் தம் நண்பரொருவரிடம் ஒரு முறை என்னைப்பற்றி இரண்டொன்று கூறினார். பெருமாள் மாடு என்று சொல்லுவார்களே தெரியுமா? அதுதான் 'புறும் புறும்' மாடு! அந்தப் பெருமாள்மாட்டுக்காரன் ஒருவனிடமிருந்து நான் சிறு கன்றுக்குட்டியாக இருந்தபோதே என்னை என் வீட்டுக்காரர் விலைக்கு வாங்கினாராம். என் பண்டைய வரலாற்றைக் குறித்து என் நினைவிற்கெட்டிய

வரையில் இவ்வொரே செய்திதான் நான் அறிந்தது. ஒரு வகையில் இச்செய்தி உண்மையானது என்றே நான் உறுதியாக நம்புகின்றேன்; ஏனென்றால், ஏனைய காளைகளைப் போன்றவன் தான் நானும் என்று நான் எண்ணுவதற்கில்லையாகலின். மக்களுள் அறிவு குறைவாயிருப்பவர்களை மாடென்றும் கடாவென்றும் மதிப்புக் குறைவாகப் பேசுவது உலக வழக்கம் அன்றோ? அதுவும் ஒரு வகையிற் சரியே. என் இனத்தாருட் பெரும் பகுதியார் அவ்வாறு தான் இருந்து வருகிறார்கள். வேளாவேளைக்குக்கிடைத்ததை உண்பதும், நீரையருந்துவதும், இட்ட வேலையை ஏன் என்னவென்று கேளாமல் செய்து தீர்ப்பதுமே அவர்கட்கு இயல்பாக இருந்து வருகிறது. இன்னும் கூறப்போனால், நல்லது கெட்டது இன்னதென்று பகுத்து அறிந்து கொள்வதற்குக் கூட அவர்கள் முயல்வதில்லை. ஆகவே மாடுகள் என்ற பெயருக்கு அவர்கள் முற்றிலும் தகுதியானவர்களே. நூற்றில் ஒருவர் இருவர் அவர்களுள்ளும் அறிவுமிகுந்து காணப்படுகிறார்கள் என்பது உண்மையே. தங்கள் தங்கள் உணர்வு மிகுதிகளையும் அறிவு நுட்பங்களையும் அவ்வப்போது இச்சிறு பகுதியினர் வெளிக்காட்டத் தவறுவதில்லை. ஆனால், அச்சமயங்களில் உங்களைச்சேர்ந்த மக்கள், “ஆகா! யாரிடத்தில் உன் வேலையைக் காட்டுகிறாய்? துள்ளின மாடு பொதி சுமக்கும் என்று நீ கேட்டதில்லையா! உன் வாலை ஒட்ட நறுக்கி விடுவேன் தெரியுமா?” என்று அதட்டி இரண்டொரு தடியடிகளையும் கொடுப்பதுண்டு. அந்த அடிகளுக்கு அஞ்சி அவர்கள் மாடுகளாக இருந்து விடுவதே சிறந்ததென்று தீர்மானித்து விடுவதும் உண்டு.

அத்தகைய ‘மாடுக’ளுக்கும் எனக்கும் என்ன வேறுபாடு என்றால் அவ்வாறு அஞ்சி அடங்கிவிட என் உள்ளம் இயைவதில்லை என்பதுதான். பெருமாள்மாட்டுக்காரனிடம் வளர்ந்து வந்தமையினால் தானோ என்னவோ எனக்குத் தெரியவில்லை; மக்களாகிய நீங்கள் செய்வதும்பேசுவதும் ஆகிய ஒவ்வொன்றும் எனக்கு நன்றாகத் தெரிகின்றது. உங்களுடைய உள்ள உணர்ச்சிகள், செயல்கள், பழக்க வழக்கங்கள் எல்லாம் எனக்குத் தலைகீழ்ப்பாடம். ஆகையால், உங்களைப் போலவே ஒவ்வொன்றைப் பற்றியும் எண்ணவும் செய்யவும் நான் பழகிவிட்டேன். அதிலும், உரிமை உணர்ச்சியும் முன்னேற்ற உணர்ச்சியும் என்னுள் முனைந்து நிற்கின்றன. ஏன் நானும் உங்களைப்போலவே விருப்பம்போல் நடந்துகொள்ளக் கூடாது என்று பலமுறை நான் கருதியதுண்டு; கருதியவாறே செய்து பழகியதுமுண்டு; ஆனால் அதனால் இடர்ப்பாடுகள் உண்டானவிடத்து அவற்றை

எடுத்து உங்களுக்கு விளக்கிக் கூறும் பேச்சு வசதி ஒன்றுமட்டும் இல்லையே என்று நான் வருந்துவேன். இவற்றை எல்லாம் கருதியே தான் "ஏனைய காளைகளைப் போன்றவன்தான் நாணும் என்று எண்ணுவதற்கில்லை" என்று நான் மேலே கூறியதாகும். இத்துடன், என் கதையைத் தொடங்குகிறேன்.

க. சந்தைத்தோப்பு

என் வீட்டுக்காரர் ஒரு குடியானவர். அவர் ஒரு வெள்ளை மனிதர். வெள்ளை மனிதர் என்றால் ஆங்கிலேயர் என்று எண்ணிவிடாதீர்கள். நான் தமிழ் முறையில் தான் கூறினேன். அதாவது வெளுத்ததெல்லாம் பால் என்று கருதுகிற முழுமகனர் என்னும் பொருள்படவே கூறினேன். அவருக்கு வாய்த்துள்ள மனைவியோ எச்சிற் கையாற் காக்கை யோட்டத் துணியாத குலமகள். தன்னைப் போலவே பிறர்க்கும் உயிர் உண்டென்று தெரிந்துகொள்ளாதவள். இவளுடைய இந்தச் சிறந்த குணங்களே உருவாயமைந்த மருதன், நாகன் என்ற இரண்டு பிள்ளைகளோடு என் வீட்டுக்காரரின் குடும்பப் பேரேடு சரியாகிவிட்டது.

"நாளை திங்கட்கிழமை அன்றோ?" என்றாள் என் வீட்டுக்கார அம்மாள். என் அடிவயிற்றில் இடிவிழுந்தது போலிருந்தது; ஏனென்றால், திங்கட்கிழமைதோறும் எங்கள் ஊரிலிருந்து மூன்றுகல் தொலைவிலுள்ள கூத்தியம்பேட்டையில் சந்தை ஒன்று கூடுவது வழக்கம். அச்சந்தைக்குக் கையில் கிடைத்த காய்கறி, பயறு, உளுந்து முதலியவற்றை வண்டியிற் போட்டுக் கொண்டுபோய் விலைப்படுத்தி வருவது வீட்டுக்காரியின் வழக்கம். அவ்வாறு போவதற்கு மொட்டை வண்டி ஒன்றில் அப்பொருள்களையெல்லாம் ஏற்றி, என்னை அதிற் கட்டி அடிப்பார்களென்று கூறவும் வேண்டுமோ! சந்தைக்குப் போக வேண்டிய பொருள்கள் எவ்வளவானாலும் எல்லாம் அந்த ஒரு வண்டியில்தான்ஏற்றப்படல் வேண்டும்! நான் ஒண்டிதான் அதனை இழுத்துச் செல்லல்வேண்டும்! ஏற்றிய பாரம் போதாதென்று நாகன் வேறு ஏறி வண்டியிலுட்கார்ந்து கொள்ளுவான். அவன் கையில் முறுக்கேறிய நூற்கயிற்றுச் சாட்டை ஒன்று இருக்கும். அச்சாட்டைக் கொம்பின் நுனியில் மூங்கின் முள்ளொன்றின் நீட்டிற்குக்குறையாத இரும்பாலமைந்த தாறு ஒன்றும் இருக்கும். அன்பிற் சிறந்த வீட்டுக்கார அம்மாளோ புளியமரத்தி

லிருந்து சிறுவிரற் பருமனுள்ள வளாரொன்றை ஒடித்துக் கையிற் பிடித்துக்கொண்டு வண்டியின் கூடவே தொடர்ந்து நடந்து வருவாள். அவ்வாறு அவள் வருவது எனக்குப் பாரம் மிகுந்துவிடப் போகிறது என்று என்மேற் கொண்ட கருணையினாலன்று. விரைந்து செல்லுமாறு என்னை அடித்து ஓட்டவும், மேடு பள்ளங்களில் வண்டி செல்வதால் வண்டியிலுள்ள பொருள்கள் கீழே விழுந்துவிடாமல் பார்த்துக் கொள்ளவுமே தான். அந்த அம்மாளுக்கும் நாகனுக்கும் மற்றும் வீட்டிலுள்ளோருக்கும் ஒரே எண்ணந்தான்; அஃது என்னவென்றால், அன்று வண்டியில் ஏற்றிக்கொண்டு போகும் பொருள்கள் அவ்வளவும் விலைப்பட்டுக்காசாவது எளியேன்விரைந்துசெல்வதைப் பொறுத்ததுதான் என்பதே. இதன் உண்மைக்கு என் உடம்பிலுள்ள சாட்டையடித் தழும்புகளும் வளாரடிக் கீறல்களும் சான்று பகரும். எனவே இத்துணைச் சிறப்போடு சந்தைக்குப் பயணம் புறப்படும் நாள் அடுத்த நாள் என்பதைக் கேட்டவுடனே என் அடிவயிற்றில் இடிவிழுந்தது போல் இருந்தது என்று நான் மேலே கூறியது புனைந்துரையாகுமோ?

இரவெல்லாம் வீட்டில் ஒருவரும் தூங்கவே இல்லை. அங்கும் இங்கும் நடந்தபடியே இருந்தார்கள். எங்கெங்கோ கிடந்த கோணிப்பைகள் பழந்துணிகள் தேங்காய்நார்க் கயிறுகள் எல்லாம் பொறுக்கிச் சேர்க்கப்பட்டன. மூட்டை முடிச்சுகள் கட்டப்பட்டு ஒவ்வொன்றாக வெளித்திண்ணையிற் கொண்டு வந்து அடுக்கப்பட்டன. திங்கட்கிழமை காலைப்பொழுது விடிய இன்னும் இரண்டு நாழிகை நேரம் இருந்தது. "ஏனடா நாகா! வண்டியைப் பூட்டேன்" என்றார் வீட்டுக்காரர். வெட்டுண்ணப்போகும் ஆடுபோல் திறு திறு என்று விழித்துக் கொண்டிருந்த என்னை நாகன் இழுத்துச் சென்று வண்டியில் பூட்டினான். இரவெல்லாம் மூட்டை கட்டிக்கொண்டிருந்த மும்முரத்தில் எனக்கு வைக்கிற அரைப்படி தவிட்டையும் வைக்க மறந்து விட்டதோடு போதிய வைக்கோல்கூடப் போட மறந்துவிட்டார்கள் என்பது வீட்டிலுள்ளவர்களுக்கு நினைவில்லை.

ஆகவே, நாகன் என்னை அவிழ்த்து இழுத்துச் சென்று வண்டியிற் பூட்டிய பொழுது எனக்குப் பசி ஒரு பக்கம் வருத்த, ஆத்திரம் ஒரு பக்கம் மிகுந்து வந்ததென்று கூறவும் வேண்டுமோ! திண்ணையில் அடுக்கப்பட்டிருந்த மூட்டை முடிச்சுகளைக் கண்டபோதே என் உள்ளநிலை எவ்வாறு இருந்திருக்க வேண்டுமென்பதை நீங்களே எளிதில் நினைத்துப் பார்த்துக்

கொள்ளலாம். மூட்டைகளெல்லாம் ஒவ்வொன்ருக வண்டியில் ஏற்றப்பட்டன. வண்டியின் அச்சுமரம் கூட என் நிலைமையை நினைந்து இரக்கங் கொள்வதுபோன்று ஒரு முறை "கிறீச்" என்று ஒலித்தது. இருந்தாற் போலிருந்து என் முதுகில் "சுளீர், சுளீர்" என இரண்டு சாட்டை அடிகள் விழுந்தன. வாற்புறத்தில் யாரோ ஓர் ஆணியை வைத்துத் திருகியது போன்றுமிருந்தது. ஓகோ! நாகன் தாற்றுக் கோலால் குத்திஞன் போலும்! போதாக் குறைக்கு அவன் என் வாலைப்பிடித்து வேறு முறுக்கிஞன். பக்கவாட்டில் நின்று கொண்டிருந்த வீட்டுக்காரி வளாரால் அடித்த அடியோ நல்லவேளையாக ஏர்க்காலிற் பட்டது. கண்ணை மூடிக்கொண்டேன்; என் தலையெழுத்தை நினைந்துகொண்டேன்; ஒரு முண்டு முண்டி யிழுத்தேன். வண்டியும் நகர்ந்தது. எங்கே வண்டி நகராமல இருந்த இடத்திலேயே வேரோடி என் குடியைக் கெடுத்து விடுமோ என்று அஞ்சிக் கிடந்த எனக்கு இஃது ஒரு வகையிற் சற்று ஆறுதலளித்தது.

சாட்டை யடிகள் மாறிமாறி விழுந்தன. தாற்றுக்கோல் தன் வேலையை அடிக்கொருமுறை தவருது செய்து வந்தது. வீட்டுக்கார அம்மாளின் கையும் ஓய்ந்தபாடில்லை. பசியோ காதை அடைத்துக் கண்ணை இருட்டிக்கொண்டு வந்தது. அடக்க முடியாத வருத்தமும் சினமும் மிகுந்தன. ஏன் இந்தப் பிறவி எடுத்தோம் என்றுகூடக் கருதத்தொடங்கினேன். இயற்கையான என் உரிமை யுணர்ச்சி மேலிட்டது. சாலையின் குறுக்கே யோடிய மரவேரொன்றின்மீது வண்டி செல்ல நேர்ந்தபோது நாகன் என் மூக்கணை கயிற்றை இழுத்துப் பிடித்து என்னை மெதுவாகச் செலுத்த முயன்ருன். ஆஞல், வயிற்றெரிச்சல் மிகுந்திருந்த நானே வண்டி வேரைக் கடந்து சென்ற சமயம் பார்த்து விசையாக ஓர் இழுப்பு இழுத்துக் கால் இடறியவன் போன்று மண்டியிட்டேன். வண்டியின் மீதிருந்த நாகன் பந்துபோலுருண்டு, அம்மாடி! என்று கத்திக்கொண்டே சாலையில் விழுந்தான். இரண்டொரு மூட்டைகளும் அவன்மீது தபதப வென்று விழுந்தன. இதைக்கண்ட என் மனம் ஒருவாறு சிறிது அமைதியுற்றது. விழுந்தவன் எழுந்தவுடன் எனக்குச் சரியானபடி சாட்டை யடிகள் கிடைக்குமென்பதை நானறிவேன். ஆஞலும், அதைப் பொருட்படுத்தாது வேண்டுமென்றேதான் இவ்வாறு செய்தேன்.

நாகன் தத்திக்குத்தி எழுந்தான். அவன் இரு முழங்கைகளிலிருந்தும் செந்நீர் ஒழுகிற்று. பாவம்! ஏர்க்காலில் அடி

பட்டு விட்டது போலும். தன் கை சலிக்கும் வரையில் என்னை அடித்துத் தீர்த்தான். காளியுருக் கொண்டவள் போற் சீறிச்சினந்து வீட்டுக்காரியும் வளாரினால் அடித்துத் தீர்த் தாள். பல்லைக் கடித்துக் கொண்டு நான் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டேன். யாரிடம் சொல்லி முறையிடுவது!

புறப்பட்ட ஏழெட்டு நாழிகைக்குள் எப்படியோ சந்தைத் தோப்பை வந்தடைந்தேன். "என்னப்பா, இந்த மாட்டை ஏன் இப்படி அடித்துக் குத்தியிருக்கிறீர்கள்!" என்று இரண் டொருவர் கேட்டனர். இக்கேள்வி என் சினத்தீயில் எண் ணெய் வார்த்தது போன்றிருந்தது. வண்டியை ஓரிடத்தில் நிறுத்தி, என்னை அவிழ்த்துச் சக்கரத்திற் கட்டிவிட்டு, தாயும் மகனுமாக எங்கோ விரைந்து சென்றனர். தங்கள் பசியைத் தீர்த்துக்கொள்ளத்தான் அவர்கள் அவ்வாறு போயிருக்க வேண்டும்!

நான எக்கேடு கெட்டால் அவர்களுக்கென்ன! கேட்பா ரற்ற என் நிலையை நினைத்துப் பார்த்தபொழுது இன்னது செய் வது என்று எனக்குத் தெரியவில்லை. கடும்பசியோ கண்ணை இருட்டிற்று. அவர்களை இனி எதிர்பார்த்திருக்க முடியா தென்று கண்டு கொண்டேன். உடனே ஒரு முடிவிற்கு வந் தேன். வண்டியிலிருந்த பச்சைப் பயறு மூட்டையை வாயினாற் கவ்வி யிழுத்துக் கீழே போட்டு வேண்டுமளவிற்குத் தின்றேன். இடையிடையே, வண்டியின் ஒரு புறம் தொங்கிய கீரைத்தண்டு களிற் சிலவற்றையும் தின்று தீர்த்தேன். சந்தைப் பரபரப் பில் என்னைக் கவனிப்பார் யார்! தின்றேன், தின்றேன், வேண்டு மளவு தின்று தீர்த்தேன். அதிலும் இதுவரையிற் பச்சைப் பயறு தின்றறியாத நான் அதன் இனிய சுவையைக் கண்டு விரைந்து வயிறூரத் தின்றேன். அச்சமயம் தவறினால் அத் தகைய வேறு சமயமும் வாய்க்குமோ?

அம்மாள் வந்துவிட்டாள். நிகழ்ந்ததைக் கண்டு அவள் முகம் கறுத்து விழிகள் சிவந்தன. அவள் கொண்டை தானாக அவிழ்ந்து கொண்டது; தன் புடவையை இறுக்கிக் கட்டினாள். "அடா நீ, குட்டிச் சுவராய்ப் போக! உன்னை இப்பொழுதே அடித்து நொறுக்கி வெட்டி யான் சட்டியில் வாரி விடுகிறேன் பார்" என்று கூவினாள். காதால் கேட்க முடியாதனவும் எளி திற் பொருள் விளங்காதனவுமான வசவுத் தொடர்கள் இன் னும் பலவற்றை அவள் வாரி இறைத்துக்கொண்டே வளாரை ஓங்கி என் முகத்தின்மீது ஓரடி கொடுத்தாள். அவ்வளவு தான்! என் சினம் கட்டுக்கடங்காமற் பொங்கிவிட்டது. என்

பிறப்பு நிலையையும் பிற்கால வாழ்வையும் ஆராய்ந்து பார்க்க அப்பொழுது நேரமில்லை. ஒரு துள்ளுத் துள்ளினேன். சக்கரத்தில் கட்டப்பட்டிருந்த கயிறு படீரென அறுந்துகொண்டது. அவளிருந்த பக்கம் திரும்பி அவள்மீது ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து என் வலிய கொம்புகளினால் அவளைத் தாக்கினேன். அவள் உருண்டு புரண்டு குப்புற விழுந்தாள். அவ்வாறு விழுந்ததால் அவளுடைய முன்னம் பற்கள் உடைபட்டு வாயிலிருந்து இரத்தம் ஒழுகிற்று. அவளுடைய விலாப்புறத்தில் என்கொம்புகள் பாய்ந்தன போலும்! புடவை செந்நீரால் நனைந்திருந்தது. அதற்குள் சுற்றிலும் கூச்சல் கிளம்பவே இரண்டே துள்ளல்களாகத் துள்ளிக் குதித்து விரைந்து ஓட்டம் பிடித்தேன். வீட்டுக்காரி எப்படிப் போனால் என்ன! நாகன் எவ்வாறானால் என்ன! அவர்கள் கொண்டு போன பொருள்கள் விலைப்பட்டாலென்ன, படாவிட்டாலென்ன! மீண்டும் அவர்கள் வீட்டிற்குச் செல்லுவதாயிருந்தால் தானே எனக்கு அக்கவலைகள். காற்றினும் கடுகி விரைந்தோடி முப்பது கற்களுக்கு அப்பாலிருந்த பெருங்காடு ஒன்றை அடைந்தேன்.

ஓனெட் சால்

அமெரிக்காவிலுள்ள ஓனெட்சால் என்னும் பறவைக்கு மிகவும் அழகிய சிறகுகளும் பச்சை நிறம் பொருந்திய நீண்ட வாலும் அமைந்துள்ளனவாம். அவ்வாலை மிகவும் கருத்தாக அப்பறவை பாதுகாத்துக்கொள்கிறதாம். இராக்காலங்களில் மரப்பொந்தைத் தேடி அதற்குள் தன் வால் சிதைந்து விடாதபடி அதனை நேரே தொங்கவிட்டுக்கொண்டுதான் அப் பறவை தூங்குகின்றதாம்.

திருநெல்வேலி தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தினுதரவில் முறையே 8, 9-6-39 வியாழன் வெள்ளிக்கிழமைகளில் மாலை 6-30 மணிக்கு திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பர் கோவில் வசந்த மண்டபத்தில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தமிழ் விரிவுரையாளர், திருவாளர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் “ தமிழர் யார் ” என்னும் பொருள் பற்றி ஒரு அரிய விரிவுரை நிகழ்த்தினார்கள்.

காலைப்பாட்டு

1. அருண னுதித்தனன் அம்புஜம் விண்டது
அளிகளும் மொய்த்தன பாராய்
அம்மா ! நீ எழுந்தோடி வாராய்

2. பசியபுல் நுனியினில் பதித்தவெண் முத்தமோ
பனித்துளி தானோ நீ பாராய்
பைங்கிளி ! எழுந்தோடி வாராய்

3. பொழுது விடிந்தது பொற்கோழி கூவிற்று
பூஞ்செடி பொலிவதைப் பாராய்
பொன்னே ! நீ எழுந்தோடி வாராய்

4. காகம் கரைந்தது காலையும் ஆயிற்று
கனியுதிர் காவினைப் பாராய்
கண்ணே ! நீ எழுந்தோடி வாராய்

—தேசிக விநாயகம் பிள்ளை.

மண்ணும் விண்ணும்

[திரு. N. K. வேலன், B. A.]

வானவெளியில் கோடிக்கணக்கான அண்டங்கள் ஆதரவு ஏதுமின்றி அசைந்து ஆடிக்கொண்டு இருக்கின்றன. நாம் காணும் விண்மீன் ஒவ்வொன்றும் ஒரு பெரிய உலகம் ஆகும். விண்ணுலகங்கள் நாம் வாழும் மண்ணுலகைவிடப் பன்மடங்கு பெரிதாகக் காணப்படுகின்றன. உலகங்களையெல்லாம் உண்டாக்குவதும் ஒரு நொடிப்பொழுதில் அவற்றை அழிப்பதும் ஆண்டவனுக்குத் திருவிளையாட்டாக அமைந்துள்ளது.

வான உலகங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது இம் மண்ணுலகம் மிகச்சிறியதாகத் தோன்றுகிறது. ஆயினும் பூமியில் எங்குப் பார்த்தாலும் உயிர்கள் மலிந்து கிடக்கின்றன. கடலின் நடுவிலும், மலையின் உச்சியிலும், பரந்த வயல்களிலும், அடர்ந்த காடுகளிலும், நாம் உட்கொள்ளும் காற்றிலும், உண்ணும் உணவிலும் உயிர்ப்பொருள்கள் நிறைந்துள்ளன. எப்பொழுது பார்த்தாலும் நாம் இயற்கை அன்னையின் இன்னிசையை ஓயாது செவியுறுகின்றோம். இவ்வுலகில் பலதிறப் பட்ட உயிர்கள் குவிந்துள்ளன. ஒரு துளி நீரை எடுத்துக் கொண்டால் அதனுள் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் துள்ளி விளையாடுவதைக் காணலாம். ஒரு குன்றிமணி அளவு தெருப் புழுதியில் 1,30,000 சிற்றுயிர்கள் வாழ்க்கை நடத்துகின்றன. வயற்புறங்களிலுள்ள மண்ணைத் தோண்டிப் பார்ப்போமானால் புழுக்கள் இடைவிடாது வேலை செய்வதைக் காணலாம். நாம் நடக்கும் பாதையிலுள்ள கல்லை விலக்கினால் அதனடியிலும் பல்வேறு உயிர்கள் ஊர்ந்து செல்வதைக் காணுகின்றோம். செடியினின்றும் ஒரு மலரையேனும் இலையையேனும் பறிக்கும்பொழுது அதனுள்ளும் பல உயிர்கள் வாழ்வதைப்பார்க்கிறோம். வானத்திற் பறவைகள் கூட்டம் கூட்டமாகப் பறந்து செல்கின்றன மரங்களிற் பறவைகள் அருமையான கூடுகளைக்கட்டி வாழ்கின்றன. பல்லி, ஓணான் இவைபோன்ற உயிர்கள் நம்மைக் கண்டவுடன் ஓடிமறைகின்றன. எறும்பு, ஈசல் முதலியவற்றின் புற்றுக்கள் பன்முறை நம் காலில் மிதிபட்டு அழிகின்றன. நம்மைச் சுற்றிலும் எங்குப் பார்த்தாலும் உயிர்கள் தோன்றுவதும் மறைவதுமாகவே இருக்கின்றன.

உயிர்கள் அனைத்தும் ஏதோ ஓர் ஆணைக்கு அடங்கி நடப்பன போன்று நமக்குத் தோன்றுகிறது.

இவற்றை நன்கு ஆராய்ந்து பார்க்கும்பொழுது, நாம் வாழும் உலகினைப்போலவே ஏனைய உலகங்களிலும் உயிர்ப் பொருள்கள் உள்ளனவோ என்னும் ஐயம் எழுகின்றது. வான உலகங்களில் உயிர்கள் வாழ முடியாது எனப் பலர் கூறுகின்றனர். இங்ஙனம் முடிவுகட்டிக் கூறுவது பொருந்தாது. வான வெளியில் அழிந்துபோன பெரிய உலகங்களும் புதிதாய்த் தோன்றும் பல்வேறு அண்டங்களும் நிறைந்துள்ளன. இவற்றுள் வெப்பம் மிகுந்த உலகங்களும், பனிபோன்று உறைந்து அழிந்துபோன உலகங்களும் இருக்கின்றன. நெடுங்காலத்திற்கு முன் பூமி ஓர் அனற்பிழம்பாக இருந்து, பல்லாயிரம் ஆண்டுகளாகக் குளிர்ந்து இப்பொழுது இருக்கும் நிலைக்கு வந்திருக்கிறது. முதன் முதலில் நீரில் உயிர்கள் தோன்றி அவற்றினின்றும் ஊர்ந்து செல்லும் உயிர்களும், பின்னர்ப் பறவைகளும், விலங்குகளும் ஒன்றின்பின் ஒன்றாய்த் தோன்றி இறுதியில் மக்கள் தோன்றினர் என்பது ஆராய்ச்சியாளர் கண்டறிந்த உண்மை. ஒரு காலத்தில் உலகம் முழுவதும் கடலால் மூடப்பட்டிருந்தது. நாளடைவில் நிலம் நீர்மட்டத்திற்குமேல் உயர்ந்தது. இதற்குப் பின்னரே தரையில் வாழும் உயிர்கள் தோன்றிக் காற்றின் உதவியால் மூச்சுவிடத் தொடங்கின. உலகின் உயிர்கள் அனைத்தும் சுற்றிலும் அமைந்துள்ள வெப்பதட்ப நிலைக்கு ஏற்றவாறு உண்டாக்கப் பட்டிருக்கின்றன. நம் உடலும் இவ்வுலகிலுள்ள நீர், காற்று, வெப்பம், ஒளி முதலியவற்றை ஒட்டி அமைந்துள்ளது. விலங்குகளின் உடல் அமைப்பும் இதேபோன்று அமைக்கப் பட்டுள்ளது. உயிர்ப்பொருள்கள் எல்லாம் நீரிலும் காற்றிலும் தோன்றி இறுதியில் நீரிலும் காற்றிலுமே சென்று மறைகின்றன. ஏனைய உயிர்களும் இப்பொருள்களினாலேயே குறைந்த அளவில் உண்டாகின்றன.

இப்பொருள்கள் இல்லாத பிற உலகங்களில் உயிர்கள் வாழ்வது எங்ஙனம்? வானநூல் ஆராய்ச்சியின் பயனாய் விண்ணுலகங்களில் பலதிறப்பட்ட இயற்கைப்பொருள்கள் இருப்பனவாக அறிகின்றோம். அவ்வுலகங்களில் உள்ள பொருள்களுக்கு ஏற்றவாறு ஏன் உயிர்கள் ஆங்கு அமைந்திருத்தல் கூடாது? அவ்வுயிர்கள் நாம் காணும் உயிர்களினின்றும் உருவத்திலும், பண்பு நலன்களிலும் முற்றிலும் மாறுபட்டிருக்கலாம். நாம் நீரில் மூழ்கினால் இறந்துபடுகிறோம். மீன்களோ எனில் நீரினின்றும் வெளியில் எடுத்தால் மாள்கின்றன.

கடலின் அடியில் உயிர்ப்பொருள்கள் நிலைத்திருக்க முடியா தெனப்பலர் எண்ணி இருந்தனர். அங்கு இருண்டு கிடப் பதனாலும் மேலே இருக்கும் நீரின் எடை கீழ்நோக்கி அழுத்து வதாலும் எவ்வுயிரும் கடலின் அடியில் உயிர்வாழ முடியா தென்பது அவர்தம் எண்ணமாக இருக்கலாம். ஆயினும் ஆழ்ந்தகடலின் உள்ளே இருந்து மிகவும் மெல்லிய உயிர்கள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் மேல் நம் விரல் பட்டாலும் தாங்கக்கூடாதனவாக மிகவும் மெல்லிய உறுப்புக்கள் இவ் வுயிர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. இஃது என்ன விந்தை! கடலின் உள்ளே ஒளி இன்மையால் இவ்வியத்தகு உயிர்கள் தம் உடலிலேயே ஒருவகை ஒளியை விடுகின்றன. இவ் வுயிர்கள் வாழும் இடத்திற்கும் ஆங்குள்ள நிலைமைக்கும் ஏற்ற வாறு இவற்றின் உடல் அமைப்பு மாறுபடுகின்றது.

இங்ஙனமே வானவெளியில் இயங்கும் எண்ணிறந்த உலகங்களில் நம் அறிவிற்கும் எட்டாத பலதிறப்பட்ட உயிர் கள் நிறைந்திருத்தல் கூடும். நாம் ஆறு அறிவுகளைப் பெற் றிருக்கிறோம். விண்ணுலக உயிர்கள் ஏன் ஏழறிவு எட்டறிவு பெற்றிருத்தல் கூடாது. அவ்வுயிர்களுக்கு இயற்கையாகவே மின் ஆற்றலும், காந்தவன்மையும், கண்ணுக்கு எட்டாத ஒளியினைக்காணும் திறனும், தொலைவில் உண்டாகும் ஒலியைக் கேட்கும் வன்மையும், சுவருக்கு அப்பால் உள்ளவர்களைக் காணும் நுட்பமும் அமைந்திருக்கலாம். அவ் வுயிர்கள் நம்மைப்போல் உண்பதும் உறங்குவதும் இல்லாமல் காற்றை உணவாகக் கொண்டு காலம் கழிக் கலாம். அவர்கள் தங்கள் விருப்பம்போல் எங்கு வேண்டு மானாலும் பறந்து செல்லும் ஆற்றல் படைத்திருக்க லாம். உயிர்கள் ஆண்களாகவும், பெண்களாகவும், நாம் அறி யாத வேறு பால்களாகவும் இருக்கலாம். அவர்கள் தங்கள் உடல்களினின்றும் ஒளிவிட்டு மின்னுகின்றவர்களாயும், சுடர் விட்டு எரிகின்றவர்களாயும் இருத்தல் கூடும். இருள் நிறைந்த இடங்களில் வாழும் உயிர்களுக்கு இயற்கையாகவே கண்கள் மிகவும் கூர்மையாய் அமைந்துள்ளன. இங்ஙனமே வேறு உலகங்களில் வாழும் உயிர்களும் மின் ஆற்றலுள்ள கண்களைப் பெற்றிருக்கக்கூடும். நாம் காணமுடியாத பொருள்களை அவர்கள் காணக்கூடும். வானவர்களின் ஏனைய உறுப்புக் களும் மிகச் சிறந்த முறையில் அமைந்திருக்கலாம். இவர்கள் சாவா வரம் பெற்றவர்களாகவும் இருக்கலாம். இவ் வானவர் கள் இன்னும் எத்துணைச் சிறப்புடன் விளங்குவரோ என்பது நம் அறிவிற்கு எட்டாததாகவே இருக்கின்றது.

உலகில் காணும் பொருள்கள் எல்லாம் கால நிலைக்கு ஏற்ற படி சிறிது சிறிதாக மாறிக்கொண்டே வருகின்றன. சுவை யும் அழகும் நிறைந்த கனிகளும், கண்ணைக் கவரும் வனப்பினை யுடைய மலர்களும் உலகில் முதன்முதலாகத் தோன்றிய காலத்தில் இத்துணைச் சிறந்தனவாக இல்லை. மக்களும் முத லில் தோன்றியதிலிருந்து பல்வேறு மாறுதல்கள் அடைந்து இப்பொழுதுள்ள உருவத்தை அடைந்துள்ளனர். குரங்கு இனத்திலிருந்து மக்கள் தோன்றினர் என்றும், பாம்பு இனத்திலிருந்து பறவைகள் தோன்றின என்றும் ஆராய்ச்சியா ளர் கூறுவர். நம் உலகம் தோன்றிய காலத்தில் உயிர்கள் எல்லாம் முற்றுப் பெறாத அருவமாக இருந்து பல்லாயிரம் ஆண்டுகளாய்ச் சிறிது சிறிதாக வளர்ச்சியுற்று இப்பொழுது நாம் காணும் அழகிய உருவத்தினை அடைந்துள்ளன. மனித உருவத்தின் உறுப்புக்களும்கூடப் பண்டைக்காலத்தில் நம் உறுப்புக்களைப் போன்றுசெம்மையாக அமைந்திருக்கவில்லை என்பது அறிஞர்கள் ஆராய்ந்து அறிந்த உண்மையாகும். படைப்பின் தன்மைகள் அளவிட்டு உரைக்க முடியாதனவாக இருக்கின்றன.

கோடிக்கணக்கான உயிர்கள் இவ் வுலகிற்றோன்றி முடி வில் எல்லாம் காற்று, நீர், புகை, புழுதி இவற்றில் போய் அடங்குகின்றன. இவ் வுலகில் நமக்கு முன் எத்துணைக் கோடி மக்கள் வாழ்ந்து அழிவுற்றனர்? அவர் தம் உடல்கள் எல்லாம் எங்குச்சென்று மறைந்தன? உலகமே ஒரு சுடுகாடாகக் காணப் படுகின்றது. மிகவும் அழகிய பட்டணங்கள் சவக்குழிகளின் மேலேயே தோன்றியுள்ளன. உலகமெங்கணும் உயிர்கள் தோன்றுவதும் அழிவதுமாகவே இருக்கின்றன. உலகங்களை எல்லாம் ஆட்டிவைக்கும் பரம்பொருள் ஒன்றே என்றும் அழியாததாக இருக்கின்றது. படைப்பின் வியத்தகு செயல் கள் நம் சிற்றறிவிற்கு எட்டாதனவாக இருக்கின்றன. ஆத லின் வான உலகங்களில் உயிர் வாழமுடியாதென வரையறுத் துக் கூறுவது சரியன்று.

உ

திருச்சிற்றம்பலம்

"செந்தமிழ்ச் செல்வி" உருக்கொண்ட நாட்டொட்டே
அவளருட்டொண்டிற்குரிமை கொண்ட

அன்பன் வாழ்த்து

1. பேறு பதினாறும் பெற்றுப் பெருவாழ்வி
னேறிப் புகழ்மணக்கு மெஞ்செல்வி—கூறுபதி
னோழாவ தாண்டி லிறைவ னருளாலே
வாழ்க சிறப்பின் மலிந்து.

2. சைவத் திருமறையுந் தக்கோர் விரிவுரையு
முய்வைத் தருங்கட் டுரைகளுமே—மெய்வைத்துக்
காரிருளை யோட்டுங் கதிரவனே போலோங்கச்
சீர்மலியுஞ் செந்தமிழ்ச்செல் வி.

3. சிற்பமோ வாணிபமோ செய்யதமிழ்ப் பாவகையோ
அற்புதஞ்சேர் விஞ்ஞான வாராய்வோ—நற்றமிழோ
வேற்றிடத்து மேலோர் வியன்சரிதை யோவெல்லாஞ்
சாற்றுவாள் செல்வி தழைத்து.

4. நாவகத்தும் நெஞ்சகத்தும் நல்லோர்கள் வாய்ப்பிறந்த
பாவகத்தும் வாழும் பசுங்கிளியே—பூவகத்து
வீணையுடன் தோன்றிவரு வித்தகியே யுன்னுடைய
வாணையெங்கு மோங்க வருள்.

—க. வேலுப்பிள்ளை.

செய்திகளும் குறிப்புக்களும்

புலமையிற் சிறந்தவரும், சொல்வன்மை மிகுந்தவரும், பொது மக்களால் ஞானியென்று மதிக்கப் பெற்றவரும், சென்னைப் பல்கலைக் கழகத் துணைத்தலைவருமாகவிருந்த சர். ஆர். வேங்கடரத்னம் நாயுடு காரு காலஞ்சென்றமை பெரிதும் வருந்தத்தக்கதாகும். அவர்தம் ஆருயிர் அமைதியுறுவதாக.

* * *

ஒன்பது அங்குல நீளமும் 14 (பவுண்டு அல்லது) இராத்தல் எடையுமுள்ள ஒரு பெரு நன்முத்து அகப்பட்டுள்ளதாம். இதற்குமுன் அகப்பட்டுள்ள முத்துக்களிற் பெரியது ஓரிராத்தலில் மூன்றிலொரு பங்கு எடையே உடையதாம்.

* * *

இந்தியப் பெரும்புலவரெனப் பாராட்டப்பட்டுவரும் வங்க நாட்டுப் புலவர் பெருமான் இரவீந்திரநாத் தாகூரின் 78-ஆம் நிறைவு குறித்து ஒரிஸ்ஸா மண்டிலத்து முதன்மந்திரியார் விசுவநாத தாஸர் அவர்கள் பூரி அரசாங்க மாளிகையிற் சென்ற மேத் திங்கள் 9-ஆம் நாள் பெரியதொரு வரவேற்பளித்தார். ஐயாயிரவருக்கு அழைப் பனுப்பப்பட்டிருந்தது.

* * *

சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப்பட்டுள்ள தமிழ்ப் பேரகராதியைப்போன்று மலையாள மொழியிற் பேரகராதி யொன்றைத் திரட்டி வெளியிடும் பொறுப்பைத் திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தார் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

* * *

இந்தி எதிர்ப்புக் கட்சி, சுயமரியாதைக் கட்சி, தென்னிந்திய நல வுரிமைச் சங்கம் முதலியவற்றின் மாப்பெருந்தலைவரான உயர்திரு. ஈ. வே. இராமசாமிப் பெரியார் அவர்கள் சிறையினின்றும் விடுவிக் கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியைத் தருவதொன்றாகும். பெரியார் வாழ்க!

* * *

சென்ற மேத் திங்கள் 15-ஆம் நாள் கூடிய மசூலிப்பட்டின நகரசபைக் கூட்டத்தில் இரண்டு உறுப்பினர்கள் கூட்ட நடைமுறை ஆங்கிலத்தில் நடைபெறுவது ஏற்றதன்றென்றும் தாய்மொழியில் தான் நடைபெற வேண்டுமென்றும் வற்புறுத்தினார்கள். இவ்வாறே ஒவ்வொரு நாட்டாண்மை நகராண்மைக்கழக உறுப்பினர்களும்

வற்புறுத்த முன்வருவார்களாயின் நாட்டுமொழி வளர்ச்சி எளிதிற் கைகூடுமன்றோ ?

* * *

ஆண்டுகள் சிலவாக நடைபெறாமலிருந்து வந்த திருவாரூர்த் தேர்விழா இவ்வாண்டு மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது மகிழ்ச்சியை யளிப்பதாகும். திருவாரூரிலுள்ள திரு. பாவா. கோபாலசாமி முதலியார், வைத்திலிங்க முதலியார்போன்ற பெரியார்களும், தருமபுர மடத்துத் தலைவர் மறைத்திரு சண்முகதேசிக சுவாமிகளும் இவ்விழாவினைச் சிறப்பாக நடத்திவைத்தற்கான உதவிகளை முன்னின்று செய்தமை போற்றற்குரியதாம்.

* * *

சிதம்பரத்தில் 1916-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு மேன்மேலும் வளர்ச்சி பெற்றுவந்த நந்தனார் கல்விக் கழகத்தைச் சென்னை அரசாங்கத்தார் தாமே ஏற்று நடத்துவதென்று கட்டளை பிறப்பித்துள்ளார்கள்.

* * *

புகையிலை வரியும், விற்பனை வரியும் அண்மையில் சென்னையில் இருசட்ட சபைகளிலும் ஆராயப்பட்டு எளிதில் நிறைவேறிச் சட்டமாகி விட்டன. இவ்வரிகள் சட்டமானமையினால் நாட்டிற்குத் தன்னாட்சியே விரைவில் வந்துவிடக்கூடும் என்று அரசாங்கச் சார்பாகப் பறையறையப்படுகிறது.

"ஓயாதோ என்கவலை யுள்ளேயா னந்தவெள்ளம்
பாயாதோ வாய்திறந்து பகராய் பராபரமே"

என்று இனி நந்நாட்டு மக்கள் கவலை யொழிந்து களித்து வாழ்வார்கள் போலும்!

* * *

இந்துமதம் என்று இக்காலை யழைக்கப்படும் மதம் தமிழர்களுடைய மதமன்றென்றும், அதற்கும் பண்டைத் தமிழர் மதத்திற்கும் எண்ணற்ற வேறுபாடுகள் உளவென்றும், ஆகவே இந்துமதக் கொள்கைகளையொட்டி வகுக்கப்பட்டுள்ள "இந்து லா" என்ற சட்ட முறை தமிழர்க்கு எவ்வகையிலும் ஏற்றதாகாதென்றும், தமிழர் சட்டமுறையொன்று தனிப்பட உடனே வகுக்கப்படுதல் வேண்டுமென்றும் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்வான். எம். இராசமாணிக்கம் பிள்ளை, பி. ஓ., எல். அவர்கள் நிகழும் சூன் திங்கள் முதல்நாள் திருமலைத்திற்கூடிய தென்னிந்திய சாது சன்மார்க்கசங்க மாநாட்டிற் கூறினார்கள். அறிஞர் இதனை ஆய்ந்து நோக்கி ஆவன செய்ய முன்வருவார்களாக.

* * *

"காங்கிரஸ் என்பதுதான் இந்திய மாநாட்டின் மாப்பெரும் இயக்கம் என்றும், அப்பேரியக்கம் மகாத்மா காந்தியின் தனித் தலைமையின் கீழ் இயங்கிவந்ததென்றும் ஆங்கில மக்கள் ஒருகாலத்தில் நினைத்திருந்தனர். ஆனால், இப்போதோ காங்கிரஸ் சமஉரிமைக் காரர்கள் ஒருபுறத்திலும், தொழிலாளர்களும் பயிரிடுவோரும்

மற்றொரு புறத்திலும் காங்கிரஸைத் தாக்குகின்ற தாக்குதல்களைக் கண்டு காந்தியாரின் ஆதிக்கம் படிப்படியாகக் குறைந்து வருகிறது என்று அவர்கள் கருத தொடங்கிவிட்டனர்.'' என்று மேத் திங்கள் 15-ஆம்நாள் குடவாயிலில் நடந்த அரசியல் மாநாட்டிற் றலைமைதாங்கிய திரு. சத்தியமூர்த்தி ஐயர் அவர்கள் கூறி வருந்தினர். "சூதும்வாதும் வேதனை செய்யும்" என்று தமிழ்க்கிழவி கூறியது உண்மையான வாக்கன்றோ!

* * *

"பதவிகளை யேற்றதனால் காங்கிரஸ் ஒத்துழைப்பு முறையில் மேலும் மேலும் ஈடுபட்டு உரிமைப்போர் முறையைக் கையிகந்து வருகின்றது" என்று ஒருகாலக் காஙகிரஸ் தலைவராயிருந்து மீண்டுந் தேர்ந்தெடுக்கப்பட்டும் அப்பதவியிலிருந்து விலகிக்கொண்டே திரு. சுபாஷ் சந்திர வசு சென்ற மே 15-ஆம்நாள் கூறியுள்ளனர். பதவி யேற்றபோது நடைபெற்ற ஒத்துழையாமைப்போர் இப்போது பதவிபெற்ற பின்னும் நடந்துகொண்டு வருவதாகவேதான் காங்கிரஸ் காரர்கள் கூறிக்கொள்கின்றனர். ஆனால் அப்போர்தானும் ஆங்கில ஆதிக்கத்துடனா, பதவிப்பாகுபாட்டு முறையிலா என்பதுதான் வினா.

நூல் வரவு

தஞ்சை வாணன் கோவை (விளக்கக் குறிப்புரை):-பொய்யா மொழிப் புலவர்பெருமா னியற்றிய சிறந்த இக்கோவை நூலுக்கு **வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை** யவர்கள் தெளிபொருள் விளக்கக் குறிப்புரை யொன்று எழுதிச் சேர்த்து வெளியிட்டுள்ளார்கள். துறை விளக்கம், இலக்கண நுட்பம், அணிவகுப்பு முதலிய இப்பதிப்பில் நன்கு எடுத்து விளக்கப்பட்டுள்ளனவாதலால இது மாணவர்கட்குப் பெரிதும் பயன்படுவதொன்றாகும். அரும்பத அகராதி யொன்றும் எழுதி இதன்கண் சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. 256 பக்கங்கள் கொண்ட அழகிய இச் சிறு நூலின் விலை ரூ. 2.

சிறு கதைத்திரள் :—இராவ்பகதூர் C. M. இராமச்சந்திர செட்டியார் அவர்கள் எழுதியது. லாங்மன்ஸ் கிரீன் அண்டு கம்பெனியார் வெளியிட்டது. 212 பக்கங்கள் கொண்டது. பதினெட்டு இனிய சிறு கதைகளும், செய்யுளானியன்ற சிறு கதைகள் ஐந்துங்கொண்ட அழகிய நூல். மிகவும் எளிய தமிழ் நடையில் இயன்ற இந்நூல் மாணவர்க்குப் பெரிதும் பயன் படுவதாகும். இதன் விலை ரூ. 1.

தமிழ்ப் பண்டிதர்

கோ. இராமலிங்கத் தம்பிரான் அவர்கள்